அறைவு 04 இயம் 22 January 02 to 06, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

**2016**

மலைமுரசின்
வாசகர்கள்
அனைவருக்கும்
வெற்றி தரும்
ஆண்டாக அமைய
வாழ்த்துக்கள்


அச்சமென்பதில்லையே!






# ஒரே நாடு இனம் கொடி

## அரச அலுவலர் உறுதிமொழியில் தமிழ் இனத்திற்கு இருட்டடிப்பு



அரச அலுவலர்களின் உறுதிமொழியில் இலங்கையில் ஒரேயொரு இனம் இருப்பதாக குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்ட சுற்றிக்கையால் பெரும் மனக்கிலேசத்தைத் தமிழ் அலுவலர்கள் அடைந்துள்ளனர்.

2016ம் ஆண்டுக்கான அரசாங்க சேவைச் சத்தியப் பிரமாண உறுதிமொழியை பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கையாக அனுப்பி வைத்துள்ளது.

தமிழில் வெளியாகியுள்ள அச்சுற்றறிக்கையில் ஸ்ரீலங்காவில் ஒரு இனம் மட்டும் இருப்பதாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது.

17

## 10ம் ஆண்டு நினைவு நாள்

2006ம் ஆண்டு சனவரி 2ம் திகதி மாலை வேளையில் திருகோணமலைக் கடற்கரையில் வைத்துச் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின்






## 13 முழுமையாகக் கிடைத்தாலும் ஈழத் தமிழரின் பிரச்சனைகள் தீரப்போவதில்லை

### -தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி-

13வது திருத்தச் சட்டம் முழுமையாக செயற்படுத்தப்பட்டால் கூட ஈழத்தமிழர் பிரச்சனைகள் தீரப்போவதில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழர்களின் பிரச்சனை என்ன என்பதை ஆழமாக அறிந்து கொண்டால் மட்டுமே 13வது திருத்தம் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு தருமா என்பதைப்பற்றிப் பேச முடியும் என அவர் தெரிவித்தார்.

கிழக்கின் முதலமைச்சர் விடுத்துள்ள செய்தியில் 13 முழுமையாகக் கிடைத்தால் புதிய அரசியல் அமைப்புத்............

17

### முஸ்லிம்களுக்கான கரையோர மாவட்டைத்தைப் பெற

## கிழக்கில் முஸ்லிம் பேரவை !



வடக்கில் தமிழ்த் தேசியப் பேரவை அமைக்கப்பட்டு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கான தீர்வுகளைக் கண்டுகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைப் போன்று முஸ்லிம் பேரவையொன்றையும் அமைக்க வேண்டும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ் சுபைர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனித்துவமாக கரையோர மாவட்டத்தை அமைப்பதற்கு தலைவர் அஷ்ரபின் காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் இன்று

17

## புதிய அரசியல் அமைப்பு தேவையில்லை

### -கிழக்கின் முதலமைச்சர்-



மாகாணசபைகள் தொடர்பான திருத்தச் சட்டத்தின் சரத்துக்களுக்கு அமைய முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படுமானால் புதிய அரசியலமைப்புத் திருத்தம் தேவையற்றது என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஷீர் அகமட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டும் என்ற போதிலும், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட தேவையில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மாகாண சபைகளுக்கு உண்மையான அதிகாரங்கள்....

17

## இராணுவச் சுவீகரிப்பில் குடியேற்றம்?

### புனானைக் குடியேற்றத்தின் பின்புலத்தில் கிழக்கின் ஆளுனர்???

மட்டக்களப்பு மாவட்டத்தின் புனாணைப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவதாக மக்கள் முறைப்பாடுகளைத் தெரிவித்து வரும் வேளையில், இராணுவத் தேவைக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளுக்குள்ளேயே அக்குடியேற்றங்கள் நிகழ்வதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

புனாணை தொடருந்துப் போக்குவரவு நிலையத்திற்கு அருகாமையில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்

17

## அதிகாரங்களைத் தமிழருக்குப் பகிர வேண்டாம்

### புலம்பெயர் சிங்கள அமைப்பு

உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பின் மூலம் நாடு பிளவுபட இடமளிக்கக் கூடாது என புலம்பெயர் சிங்களவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

இக்கோரிக்கையை எழுத்து மூலம் ஸ்ரீலங்காவின் சனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ள இவ்வமைப்பு, மலர்ந்திருக்கும் புத்தாண்டில் நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றைத் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## அனைவருக்குமான அழைப்பு தவறானதா?

ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வாக எதையாவது ஒன்றை முன்மொழிந்து, வழிமொழிந்துவிடும் முயற்சியில், நல்லாட்சிப் போர்வையில் முகங்களை மறைத்துக்-கொண்டுள்ள பேரினவாத அரசு ஈடுபட்டு வருகின்றது.

அந்த எதையாவது ஒன்றைக் கண்டுபிடித்து அதனைப் புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் முன்மொழிந்துவிட மேற்கொள்ளப்படும் பகீரதப் பிரயத்தனத்தில் அரசு இயங்கிவரும் வேளையில் அதற்குத் தலையிடியாக வடக்கில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை மெதுவாகத் திடமாகி வருகின்றது.

தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கமானது வெறுமனே ஒரு புதிய அரசியல் கட்சி-யொன்றினதோ அல்லது புதிய தமிழ் அமைப்பு ஒன்றினதோ உருவாக்கம் என்ற மட்டுப்பாட்டுக்-குள் இல்லாமல், அவ்வமைப்பு பரவலான தமிழ் மக்களைத் தன்னகத்தே ஈர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளைத் தனது இரண்டாவது அமர்வின் முடிவில் வெளிப்படுத்தியிருந்தது.

தமிழ் மக்களுக்கான தீர்வை முன்மொழிண விருப்பமுடைய அனைவரையும் இவ்வமைப்புடன் இணைந்துகொள்ளுமாறு இணைத்தலைவர்களுள் ஒருவரான வடமாகாண முதல்வர் அறிவிப்பை மேற்கொண்டார்.

இந்த அறிவிப்பானது வெறுமனே குறித்த ஒரு அணியினரை நோக்கி விடப்பட்டதல்ல. ஆனால் இவ்வறிவிப்பைத் தமக்குத் தேவைக்கு ஏற்றவகையில் வளைத்த சில தமிழ் ஊடகங்கள் " கருணா மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் அழைப்பு" என்று தலைப்புச் செய்தியிட்டன.

உடனடியாகவே கண்டனங்களுக்கு உள்ளான இவ்வழைப்பை அடுத்து ஒட்டு மொத்தத் தமிழர் பேரவையை பேரினவாத அரசுகளின் சதியினால் உருவாகிய அமைப்பாகச் சித்தரிக்க முயற்சிகள் நடைபெற்றன.

இங்கு முக்கியமாகச் சிந்திக்க வேண்டிய விடயம் யாதெனில் எந்த ஒரு அணியினரையும் குறிப்பிடாமல் பொதுவாக விடப்பட்ட இவ்வழைப்பு தவறானதா? என்பதே.

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வை முன்மொழிய வேண்டியவர்கள் யார்? இந்தக் கேளிவிக்கான விடையை மிக முக்கியமானதொரு ஒப்பந்தத்தை முன்வைத்துப் புரிய முயற்சிப்பது நன்று.

ராஜீவ்காந்தி-ஜெயவர்த்தனா ஆகியோர் மேற்கொண்ட ஒப்பந்தத்தில் ஈழத்தமிழர்கள் ஒரு தரப்பினராகச் சேர்க்கபடவில்லை என்பதுடன் ஈழத்தமிழர்களுக்கு என்ன தேவை என்பதையிட்டு அவர்கள் சொல்வதற்கு வாய்ப்பளிக்கப்படாமலே அவர்களுக்கான தீர்விற்காக அவ்வொப்பந்தம் நிகழ்ந்தது. அதற்கு என்ன நடந்தது என்பதை நாம் நாளாந்தம் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம்.

ஆகவே தமிழர்களின் பிரச்சனைக்கான தீருவைத் தமிழர்களே முன்மொழிந்தால் மட்டுமே அத்தீர்வு ஒரு உன்னதமான தீர்வாக இருப்பதுடன், நூற்றாண்டை நோக்கி நகரும் ஈழத்தமிழர்களின் பிரச்சனை நிரந்தர அமைதியுடன் முற்றுப்பெறும்.

அந்த வகையில் அரசினால் முன்மொழியப்படும் தீர்வை ஏற்றுக்கொள்ளத்தயாராயிருப்பதான தோற்றப்பாட்டைத் தமிழர்களின் தேர்தல் தலைமை வெளிப்படுத்தியதை அடுத்து, தமிழர்களுக்கு இதுதான் தேவை என்பதை வெளிப்படுத்தும் அமைப்பாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பேரவையில் அனைவரும் பங்குபற்றுவதன் ஊடாக ஒரே தீர்வை அனைத்துத் தமிழ்த் தலைமைகளும் வெளிப்படுத்தக் கூடிய சாத்தியத்தை உருவாக்கவே அனைவருக்குமான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், தமது நடவடிக்கையால் மக்களால் துரோகிகள் என அடையாளப்படுத்தப்-பட்டவர்கள் என்ற மூன்று வகையில் தமிழ்த் தலைமைகளை நாம் வகைப்படுத்தலாம்.

மேற்சொன்ன வகைகளுள் எந்தவொரு வகையைத் தமிழப் பேரவை புறந்தள்ளுகின்றதோ அந்த வகையை முன்நிலைப்படுத்தி பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கான தீர்வை முன்மொழியும் ஆபத்து இருக்கின்றது.

அவ்வாபத்தைத் தீருத்துக்கொள்ளும் தந்திரோபாய நகர்வாகவே அனைவருக்குமான அழைப்பு அவதானிக்கப்பட வேண்டும்.

அனைத்துத் தரப்பும் ஒரே தீர்வை முன்மொழியும் போது பேரினவாத அரசும், பூகோள அரசுகளும் அதனைப் பற்றிச் சிந்திக்கும் கட்டாயமிருப்பதை திம்புப் பேச்சுவார்த்தையின் வரலாறு காட்டிநிற்கின்றது.


அதே வகையில் தமிழர்களுக்காகப் புலத்தில் போராடுகின்ற அனைத்து அமைப்புக்களும் அவ்வொரே தீர்வை முன்நிறுத்திப் போராட நிர்ப்பந்திக்கபடுவதுடன் தமிழரின் விடிவிற்கான அனைத்துப் போராட்டங்களும் ஒரே புள்ளியில் சந்திப்பதை உருவாக்கி விட முடியும்.

துரோகிகளையும் பயன்படுத்தும் அழைப்பே இது!

## கிழக்கு மாகாணப் பன்மைக் கலாசார நிகழ்வு

கிழக்கு மாகாண கல்வி கலாச்சார அமைச்சினால் எற்பாடு செய்து நடாத்தப்பட்ட பன்மைத்துவ கலாச்சார நிகழ்வின் பகுதி நிகழ்வொன்று கடந்த செவ்வாயன்று திருகோணமலை புனித மரியால் கல்லாரி கலையரங்கத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்டின் பெனான்டோ மற்றும் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி காணி அமைச்சர் ஆரியவதி கலபதி மற்றும் மாகாணசபை உறுப்பினர்கலான ஜெ.ஜெனார்த்தனன் மற்றும் லாகிர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.







## ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்புக் கூட்டம்

திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி ஒருகிணைப்பு கூட்டம் தம்பலகாமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மாவட்ட பாரளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவருமான அப்துல்லா மஹ்ருப் தலைமையில் மாவட்ட முகாமையாளர் சுவர்ண குருகே, முஸ்தபா, சேருவில தொகுதி ஐ தே க அமைப்பாளரும் மாகண சபை உறுப்பினருமான டொக்டர் அருன சிரிசேனா, முன்னால் பிரதேச உறுப்பினர்கள் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹருப் உரையாற்றுகையில் எதிர்காலத்தில் கட்சி நடவடிக்கையை மிகவும் துள்ளியமாகவும் அனைவரின் உதவியுடன் கொண்டு செல்ல வேண்டும் எனத் தெரிவித்ததுடன் அபிவிருத்தி சம்மந்தமாகவும் சில ஆலோசனைகளைக் கேட்டறிந்து அபிவிருத்தி நடவடிக்கையை கூடிய விரைவில் செயல்படுத்தும் வாக்குறுதியையும் வழங்கினார். அழித்தார்

ஹலீம்

## சந்திரிகா அம்மையார் காணி அமைச்சரைச் சந்தித்தார்



சுகவீனம் காரணமாக சிங்கபூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வெளியேரி லண்டனில் தனது மகளின் வீட்டில் இருந்து மூண்று மாதம் ஓய்வு எடுக்கும் காணி அபிவிருத்தி அமைச்சர் எம் கே ஏ டி எஸ் குணவர்த்தண அவர்களை முண்ணால் ஜணாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் சுகம் விசாரிக்க லண்டனுக்கு சென்று பார்வையிட்டார்.

ஹலீம்

## குறுந்திரைப்பட வெளியீடு

சேனையூர் நிருபர்

திருகோணமலையை பிறப்பிடமாக கொண்ட செல்வராஜா ரமேஸ் அவர்களின் இயக்கத்தில் உருவான உணர்வுகள் என்ற குறுந்திரைப்படத்தின் வெளியீட்டு விழா தைப்பொங்கல் தினத்தன்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

அச்சுதன்



குறுந்திரைப்பட அணி

## வடக்குக்கிழக்கை இணைத்தால் போராட்டம்

ரபாய்டீன்

உத்தேச அரசியலமைப்பு யோசனையில் எதிர்கட்சித்தலைவர் இரா சம்பந்தரினால் முன்வைக்கப்படும் இணைந்த வடகிழக்கு மாகாணத்துக்-கெதிராக கிழக்கு மாகாண மக்கள் அமைப்பு போர்க்கொடி தூக்கியுள்ளது.

ஜனாதிபதயும் பிரதமரும் உரிய பதிலழிக்காவிடில் அடுத்து வரும் சில தினங்களில் கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் அணைவரையும் ஒன்றிணைத்து இதற்கெதிராக வீதியில் இறங்கிப் போராாடுவோம், நாட்டைப்-பிளவு படுத்த சர்வதேசப் பின்னனியில் நோர்வே செயல்படுகிறது என கிழக்கு மாகாண மக்கள் அமைபபின் ஏற்பாட்டாளரும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகணசபை உறுப்பினருமான ஜயந்த விஜேசேகர ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் வடகிழக்கு நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டு மாகாண சபைகள் தனித்தனியாக இயங்கி வருகின்றன.

இருபத்தைந்து வருட யுத்தத்தின் பின்னர் இம்மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி சந்தோசமாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வருகின்ற நிலையில் மீண்டும் பிரிவினைவாதத்தூண்டி தமிழ்ஈழம் கோரும் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்த அவர் முன்பு வடகிழக்கு இணைந்திருந்த நிலையில் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் என்ன செய்தார் அவர் தமிழ்ஈழப்பிரகடணம் செய்தார். வடகிழக்கை சுற்றி எண்ணெய் வளம் உள்ளது. புல்மோட்டையில் அதிசயத்தக்க கனிய வளம் உள்ளது. இயற்கைத் துறைமுகம் உள்ளது. எமது இயற்கை வளங்களைச் சூறையாடும் சதிமுயற்சி சர்வதேசத்தினால் முன்னெடுக்கப்படுகிறது. எமது நாட்டில் எத்தனையோ புத்திஜீவிகள் இருக்கத்தக்க நோர்வே வந்து எமக்கு அரசியமைப்பு ஆலோசனை சொல்லத் தேவையில்லை என அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

# ரண்பிம காணி உறுதிப் பத்திரம் கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் வழுங்கி வைப்பு

**அம்பாறை**

கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் குடியேற்றப்பட்டு வாழ்ந்துவரும் 55 குடும்பங்களுக்கு, "ரண்பிம" காணி உறுதிப்பத்திரம் மற்றும் காணி உத்தரவு பத்திரம் என்பன கடந்த 29.12.2015 அன்று பிரதேச செயலக கோட்போர் கூடத்தில் வைத்து கையளிக்கப்-பட்டன. இந்நிகழ்வில் "ரண்பிம" காணி உறுதிப்பத்திரம் 20 பேருக்கும் காணி உத்தரவு பத்திரம் 35 பேருக்கும் வழங்கப்பட்டன.

அத்துடன் ,நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.கரன் எழுதிய பிரதேச செயலகத்தினுடாக பொது மக்கள் அரச சேவையை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டி நூலும் வெளியீட்டு வைக்கப்பட்டது. நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துசித பீ.வணிகசிங்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன், அம்பாறை மாவட்ட உதவி காணி ஆணையாளர் ஏ.எல்.ஐ.பாஹு, அம்பாரை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் விதார நாணயக்கார, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# தொடர்ந்து தமிழ் மக்களை ஏன் ஏமாற்றுகின்றீர்கள்? - பிரசன்னா இந்திரகுமார்

**மட்டக்களப்பு**



தமிழ் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைமைப் பதவிக்கு தமிழர்கள் எவரும் நியமிக்கப்படாமையானது கண்டிக்கத்தக்கது என கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் பேசி இம்மாவட்டத்தில் தமிழர்களை பெருன்பான்மையாக கொண்ட பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்புக் குழுக்களின் தலைவர்களாக மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது மாகாண சபை உறுப்பினர்கள் நியமிப்பது தொடர்பாக அவர்களின் கவனத்துக்கு கொண்டு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான இரா.சம்மந்தனை கேட்டுள்ளார்.

இது தொடர்பாக தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவருக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளில் 10 பிரதேச செயலக பிரிவுகள் தமிழர்களை பெருன்பான்மையாக கொண்டுள்ள போதிலும், அந்த பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவராக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களில் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மட்டுமே ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இம் மாவட்டம் 72 சதவீதத்துக்கும் மேல் தமிழர்களைக் கொண்டது. ஐந்து மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் 3 பேர் தமிழர்கள். 11 மாகாண சபை உறுப்பினர்களில் 8 பேர் தமிழர்களாக இருக்கின்ற போதிலும் தாங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்-கப்படுவதாக தமிழ் மக்கள் கருதுவது சரியாகவே தென்படுகின்றது என்றார்.

# இருவருக்கு கடூழிய சிறைத் தண்டனை

**மட்டக்களப்பு**

**5,000** மில்லிகிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த மட்டக்களப்பு, காத்தங்குடி பிரதேசத்தைச் சேர்ந்த கமிட் முபாறாக், அகமட் ஸ்சிராட் ஆகிய இருவருக்கு தலா 20,000 ரூபாய் தண்டப் பணமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கடுழீய சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

அத்துடன், குறித்த இருவரிடமும் இருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சாவை அழித்துவிட உத்தரவிட்டதுடன், கைதுசெய்யபட்ட இருவரின் கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# தளவாயில் சட்டவிரோத மர அழிப்பு



அரசாங்கத்தினால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு அத்துடன் பாதுகாக்கப்பட்டு வரும் தளவாய் கடற்கரைப் பிரதேசத்தில் மீன்பிடி தொழிலுக்காக சிலர் பெறுமதியான மரங்களை வெட்டியுள்ளதாக தெரியவந்துள்ளது. இதுகுறித்து அரச அதிகாரிகளோ, காவல்துறையினரோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# ஹெரோயின் வைத்திருந்தோர் கைது

**ஏறாவூர்**



ஏறாவூர் நகரில் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேரை தாம் கைது செய்திருப்பதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று பொது மக்களிடம் இருந்து கிடைத்த தகவலின் படி ஹெரோயின் போதைப் பொருளைத் தம்வசம் வைத்திருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு ஏறாவூர் புன்னைக்குடா வீதியில் வைத்து மூவரும் (தலா 30 மில்லிகிராம் ஹெரோயினுடன்), ஏறாவூர் மிச்நகர் கிராமத்தில் வைத்து மற்றொரு-வருமாக (20 மில்லிகிராம் ஹெரோயினுடன்) ஒரே நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

# வாவியிலிருந்து சடலம் மீட்பு



பாலமீன்மடு மட்டிக்கழியில் உள்ள வாவியில் இருந்து கடந்த புதன்கிழமை மாலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவ்வாவிப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டு வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர் கரடியனாறு பகுதியை சேர்ந்த 57வயதுடைய திருஞானச்செல்வம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு காவல்துறையினர் தெரிவித்தனர். கரடியனாறு பகுதியை சேர்ந்த இவர் நாவலடியில் உள்ள உறவினர்களின் வீட்டில் வந்து தங்கியிருந்ததாக தெரியவருகின்றது.

# தொடரும் பிரச்சினைகள் மக்கள் விசனம்

**செங்கலடி**

கோப்பாவெளி கிராம மக்கள் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக ஐ.பி.சி தமிழ் செய்திகளுக்கு தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தும்பாலம் சோலை கோப்பாவெளி, மற்றும் வெலிக்காசந்தி ஆகிய மூன்று கிராமங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரடியாக யுத்தத்திற்கு முகம்கொடுத்த-ததாகவும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளை சந்தித்து பின்னர் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

தகரங்கள் மற்றும் சில அடிப்படை பொருட்கள் என்பவற்றை மாத்திரமே வழங்கியதாகவும் தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே தான் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் ஐ.பி.சி தமிழ் செய்திகளுக்கு தெரிவித்துள்ளனர்.

# தங்க நிற தகரங்கள் கடத்தல்

**காத்தான்குடி**

பெருமளவிலான போலி தங்த நிற மரஞ்சிகளை (தங்க நிறத்திலான தகரங்கள்) கடத்தி விற்பனை செய்வதற்காக பஜீரோ வாகனத்தின் மூலம் எடுத்து வந்த இருவரை, எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறிலில் வைக்குமாறு நீதிபதி வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவானும் மாவட்ட நீதவானுமாகிய ஏ.எம்.ரிஸ்வி, கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் வாகரை பிரதேசத்தில் வைத்து இச்சந்தேகநபர்கள், கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 கிலோ 25 கிராம் எடையுடைய தங்க நிற 4,011 மரஞ்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், பஜீரோ வாகனமும் காவல்துறையால் கைப்பற்றப்பட்டதாக காத்தான்குடி பொறுப்பதிகாரி ஏ.பீ. வெதகெதர தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

கொழும்பு

# தேச நிர்மாண வரி 01.01 முதல் அதிகரிப்பு

வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட தேச நிர்மாண வரி நேற்று முதல் அமல்படுத்தப்படுகிறது. இதற்கமைய, சில பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை திருத்தப்பட்டுள்ளது.

தேச நிர்மாண வரி இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 2 வீதத்திலிருந்து 4 வீதமாக அதிகரிக்கப்பட்டது. விநியோக செயற்பாட்டில் இது தாக்கத்தை செலுத்துவதால் சிகரெட்டுகளின் விலை இன்று முதல் 1 ரூபா தொடக்கம் 2 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த வரித்திருத்தம் தொலைத்-தொடர்புத் துறைக்கும் தாக்கத்தை செலுத்தும் என அரச நிதி கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே.செனவிரத்ன கூறினார். எனினும், கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் தொலைத்தொடர்பு நிறுவனங்களே தீர்மானிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் குழாய் நீர் கட்டணங்களில் தேச நிர்மாண வரி தாக்கத்தை செலுத்தாதென அரச நிதி கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

வாகன இறக்குமதியின்போது எல்.சி. திறப்பதற்காக ஒரு மோட்டார் வாகனத்திற்கு 15 ஆயிரம் ரூபாவை வங்கிக்கு செலுத்த வேண்டும். மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கு 2000 ரூபாவை செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடனட்டைகளுக்கான முத்திரைக் கட்டணங்கள் நீக்கப்பட்டுள்ளன.




# உதவிகள் இலங்கைக்கும் கிட்டும்

## நூற்றாண்டு சவால் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு

எதிர்வரும் 2016 நிதியாண்டில் உதவி பெற தகுதியுடைய நாடுகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் நூற்றாண்டு சவால் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

அந்த கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி டனா ஜே. ஹைட்டிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் கிடைத்த வெற்றியில் ஒன்றாக இதனை கருதுவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. குறுங்கால மற்றும் நீண்டகால ஆலோசனை வழங்குதல், நிதிசார்ந்த உதவிக வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

# வீட்டை பரிசளிக்க முயன்றமைக்காக வர்த்தகர் விசாரணைக்கு அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வீடு ஒன்றை அன்பளிக்கவுள்ள வர்த்தகரான ஏஎஸ்பி லியனகே என்பவர் லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 4ம் திகதியன்று ஆஜராகுமாறு அவர் கேட்கப்பட்டுள்ளார். இராஜகிரியவில் உள்ள பீக்கொக் ஹவுஸ் என்ற வீட்டை, ராஜபக்சவுக்கு அன்பளிப்பாக வழங்க லியனகே திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தோல்வியின் பின்னர் நண்பர் ஒருவர் கேட்டுக் கொண்டமைக்கு அமைய தாம் அந்த வீட்டை மஹிந்தவுக்கு வழங்க தீர்மானித்தாக லியனகே குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இது தொடர்பில் இணக்கத்துக்கு வர முடியாதவாறு தமது மனைவி மற்றும் இரண்டு மகள்மார் தமக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் லியனகே மேலும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க கண்காணிப்பு இருப்பதனால் இக் கொள்வனவு இடம்பெறாது

கொழும்பு

பாகிஸ்தானின் மூன்றாம் தலைமுறை சீன வடிவமைப்பான ஜேஎப் 17 போர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்யாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிர்வரும் 4ம் திகதி முதல் 6ம் திகதி வரை விஜயம் செய்யவுள்ள பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் செரீப் அழுத்தம் கொடுத்தாலும் குறித்த விமானக் கொள்வனவு இடம்பெறாது என்று இலங்கை அதிகாரிகளை கோடிட்டு இந்திய செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த 29ம் திகதியன்று ஐஎச்எஸ் ஜேன்ஸ் 360 இணையத்தின் தகவல்படி குறித்த விமானக் கொள்வனவு தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியா தமது போர் விமானமான தெஜாஸை இலங்கை கொள்வனவு செய்யவேண்டும் என்று வலியுறுத்தி வந்த போதும் இந்தியாவின் இந்த விமானம் இன்று இந்திய விமானப்படையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அமெரிக்காவின் போதுமானளவு கண்காணிப்புக்கள் இருப்பதன் காரணமாக புதிய போர் விமானக் கொள்வனவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் வழங்கமாட்டார் என்று அரசாங்கத் தரப்பு தெரிவித்துள்ளது

# 20 மைக்ரோனிற்கு குறைவான பொலித்தீனிற்கு தடை

20 மைக்ரோன் இற்கும் குறைவான அளவுடைய பொலித்தீன் பாவனைக்கு 01.01 முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக உணவு வகைகளை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் வகைகளின் மைக்ரான் அளவு 20க்கும் குறைவாக காணப்படுகின்றது. இவ்வாறான பொலித்தீன் வகை தயாரிப்பு, விற்பனை மற்றும் பாவனை போன்றவற்றிற்கு எதிராக சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக 10,000 ரூபாவிற்கு உட்பட்ட தண்டம் அறவிடுவதற்கும் சிறை தண்டனை வழங்குவதற்கும் முடியும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய இந்து நடைமுறை அமுல்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத சுருக்கு வலை பிரயோகம் பெரும்பான்மையினத்தினரால்

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் கடற்பகுதியில் அதிக அளவிலான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்களின் அத்து மீறிய சட்டவிரோத கடற்தொழிலுக்கு கடற்படையினர் உதவி வருவதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சுருக்குவலை தடை செய்யப்பட்டுள்ள நிலையில் சிலாவத்துறை, சவுத்பார், மன்னார் பழைய பாலம் அகிய பகுதியில் கடற்படையினரின் ஆதரவுடன் பெரும்பான்மையின மீனவர்கள் சுருக்கு வலை மூலம் மீன்கள் பிடிப்பதாக தெரிவிக்கும் இப் பகுதி மீனவர்கள், இதனை தடுப்பதற்கு எவரும் சட்டரீதியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

பெரும்பான்மையின மீனவர்களை போல் தாமும் சுருக்கு வலை மூலம் மீன்பிடியில் ஈடுபட்டால் தமிழ் மீனவர்கள் என்ற பாகுபாடு காரணமாக கடற்படையினர் பக்கச்சார்பாக நடந்து கொள்வதுடன், இவ்வாறு சுருக்கு வலை மூலம் கடற்றொழிலில் ஈடுபடும் தமிழ் மீனவர்களை கைது செய்து சம்பந்தபட்ட அதிகாரிகளிடம் ஒப்படைத்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அதற்கான தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் என பாதீக்கப்பட்ட மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# தனியார் மருத்துவ கட்டணத்தை குறைக்க முயற்சி

தனியார் வைத்தியசாலைகளில் அறிவிடப்படும் மருத்துவ கட்டணங்களை குறைப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு அதிக பணம் அறவிடப்படுவதாக பொதுமக்களிடமிருந்து தினந்தோரும் முறைப்பாடுகள் கிடைப்பதாக அதிகார சபையின் தலைவர் ஹஷித திலகரட்ண குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவப் பரிசோதனைகளுக்கு வெவ்வேறு வைத்தியசாலைகளில் வித்தியாசமான தொகை பணம் அறிவிடப்படுவதால் அதில் சிக்கல் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் மேற்கொள்ளமுடியாத சோதனைகளுக்கு தனியார் வைத்தியசாலைகளில் அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அதிகார சபையால் கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 31 இற்கு முதல் வெளியிட ஏற்பாடு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மதம் 31ம் திகதிக்கு முன்னர் வெளியிட முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது. தற்போது விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் இறுதி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இம்மாதம் 28ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை விடைத்தாள்களை திருத்தும் பணிகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளதுடன் முதலாவது கட்டம் ஜனவரி 5ம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இரண்டாவது கட்டம் ஜனவரி 16 முதல் 25ம் திகதி வரை 87 மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு உலகச் செய்திகள்

## பாக்கிஸ்தானியர் ஒருவருக்கு இந்திய குடியுரிமை அனுமதி

இந்தியா

பாகிஸ்தானைச் சேர்ந்த பாடகர் அட்னன் சமிக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டதால் லாகூரில் இருந்து அவர் டெல்லியை வந்தடைந்துள்ளார்.

பாடகர் அட்னன் சமிக்கு இந்திய குடியுரிமைக்கான ஆவணங்களை மத்திய உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜு வழங்கியுள்ளார்.

லாகூரில் பிறந்த பாடகர் அட்னன் சமி கடந்த 2001 ஆம் ஆண்டு இந்தியா வந்தடைந்துள்ளார். இந்தி திரைப்படங்களில் ஏராளமான பாடல்களை பாடி இவரின் கடவுச்சீட்டு அவ்வப்போது நீடிக்கப்பட்டு வந்தது.

கடந்த 2015 ஆம் ஆண்டு அட்னன் சமியின் கடவுச்சீட்டு காலாவதியானதை தொடர்ந்து அதனை புதுப்பிக்க பாகிஸ்தான் நாடு மறுப்பு தெரிவித்திருந்தது. இதனையடுத்து அவர் இந்தியாவில் தங்குவதை சட்டபூர்வமாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

## ஐ.எஸ் தாக்குதல் ஜேர்மனியில் முறியடிப்பு

ஜேர்மன்

ஜெர்மனி நாட்டின் முனிச் நகரில் புத்தாண்டு தின கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் வகையில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் சதியை காவல்துறையினர் முறியடித்துள்ளனர்.

இதுதொடர்பாக, கிடைத்த ரகசிய தகவலையடுத்து, முனிச் நகரில் உள்ள முக்கிய ரெயில் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அங்கிருந்த மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

ஐந்தில் இருந்து ஏழு பேர்வரை மனித வெடிகுண்டுகளாக மாறி தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் நடமாடிக் கொண்டிருப்பதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலையடுத்து தலைநகர் பெர்லின் மற்றும் முனிச் நகரில் ஆயிரக்கணக்கான காவல்துறை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜெர்மனியின் ஹனோவர் நகரில் புத்தாண்டையொட்டி நெதர்லாந்து - ஜெர்மனி அணிகள் மோதும் நட்புரீதியான கால்பந்து போட்டி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜெர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்க்கெல் மற்றும் உள்துறை மந்திரி தாஅஸ் டி மைசிரே ஆகியோர் இந்த போட்டியை காண்பதற்காக ஹனோவர் நகருக்கு செல்லவிருந்தனர். தற்கொலைப்படை தாக்குதல் தொடர்பான எச்சரிக்கை வெளியானதையடுத்து, அந்த கால்பந்து போட்டி ரத்து செய்யப்பட்டது.

## ஈரான் மீது அமெரிக்கா தடை

### ஏவுகணைச் சோதனை மேற்கொள்ளப்பட்டமைக்காகவே இத்தடை

ஈரான்

ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரித் திணைக்களம், ஈரான் மற்றும் இன்னுஞ் சில சர்வதேச நிறுவனங்களுக்கெதிராகத் தடைகளை விதிப்பதற்குத் தயாராகி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிகாரிகள், ஒக்டோபரிலும் நவம்பரிலும் இரண்டு ஏவுகணைச் சோதித்தமைக்காகவே, இந்தத் தடை விதிக்கப்படவுள்ளததாகத் தெரிவித்தனர். ஒக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைச் சோதனை, அணுகுண்டுகளைக் காவக்கூடிய ஏவுகணைகளைச் சோதனை செய்வதற்கு ஐ.நா பாதுகாப்புச் சபையால் விதிக்கப்பட்ட தடையை மீறியமையாகும் என அச்சபை தீர்ப்பு வழங்கியதையடுத்தே, இந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கான பணிகளை, அமெரிக்க திணைசேரி தயாராகி வருகிறது.

ஏவுகணைச் சோதனையில் பங்களித்த நிறுவனங்களெனக் கருதப்படும் ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், ஹொங் கொங் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் மீதே, இந்தத் தடை விதிக்கப்படவுள்ளது.

## பத்தாவது சந்தேக நபர் கைது

பெல்ஜியம்

பாரிஸ் தாக்குதல் தொடர்பான விசாரணையில் 10 ஆவது சந்தேகநபரை பெல்ஜிய காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். தலைநகர் பிரசல்ஸ்சில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

22 வயதான குறித்த இளைஞருக்கு எதிராக பயங்கரவாத கொலை மற்றும் பயங்கரவாத ஸ்தாபனத்துடன் இணைந்து செயற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் பாரிஸ்சில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பிரதானமாக பெல்ஜியத்தை தளமாக கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன.

பாரிஸ்சில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்திய இருவர் பெல்ஜியத்தை வசிப்பிடமாக கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பெல்ஜியத் தலைநகர் பிரசல்ஸ்சில் பயங்கரவாத தாக்குதல் எச்சரிக்கை காரணமாக புதுவருட கொண்டாட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக பெல்ஜிய பிரதமர் சாள்ர்ஸ் மிச்சேல் குறிப்பிட்டுள்ளார்.

## ரஷ்யா அமெரிக்காவிற்கு அழைப்பு

ரஷ்யா

சர்வதேச சவால்களை எதிர்கொள்வதற்காக, ஐக்கிய அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து செயற்பட வேண்டுமென, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கான புதுவருடச் செய்தியிலேயே அவர், இந்த அழைப்பை விடுத்துள்ளார். உக்ரைனின் கிறீமியா விவகாரம் காரணமாக, இரு நாடுகளுக்குமான முரண்பாட்டு நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து, தற்போது, சிரியா விவகாரத்திலும் அந்த முரண்பாடு நீடிக்கிறது. இந்நிலையிலேயே, புட்டினின் செய்தியில், "பூகோளப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, ரஷ்யாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையிலான உறவுகள் அத்தியாவசியமானவை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, இரு நாடுகளும், ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டால், உலகம் முழுவதிலுமுள்ள சவால்களையும் ஆபத்துக்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பாக்கிஸ்தானில் நிலநடுக்கத்தால் பாதிப்பு

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு 41 பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்துள்ள 30க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நிலநடுக்கம் தலைநகர் புதுடில்லி, ஜம்முகாஷ்மீர் மாநிலங்களில் உணரப்பட்டது. இது ரிக்டர்அளவு கோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளது. ஆப்கானிஸ்தான் எல்லையை மையாமாக கொண்டு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால், பாகிஸ்தான், வடஇந்திய மாநிலங்களான டெல்லி, காஷ்மீர் ஆகிய இடங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால், ஆப்கனிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் பல்வேறு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. பாகிஸ்தானின் பெஷாவர் நகரில், கட்டடங்கள் இடிந்து விழுந்ததில், 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சிங்கப்பூரிடம் மன்னிப்பு கோரியது இஸ்ரேல்

இஸ்ரேல்



சிங்கப்பூரின் தேசியக்கொடியை அவமதித்த செயலுக்காக இஸ்ரேல் அரசு மன்னிப்பு கோரியுள்ளது.

சிங்கப்பூரில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தில் டிசம்பர் 27 ஆம் திகதி நடைபெற்ற விருந்தில், சிங்கப்பூரின் தேசியக்கொடியை மேஜையில் விரித்து பயன்படுத்தியுள்ளனர்.

இதுபற்றிய செய்திகள் ஊடகங்கள் வெளியானத்தைத் தொடர்ந்து, சிங்கப்பூர் மக்கள் கோபம் கொண்டதோடு மட்டுமல்லாமல், இதுகுறித்து இஸ்ரேல் தூதரகத்துக்கு சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சம் சம்மன் அனுப்பியது.

இதனைத்தொடர்ந்து இஸ்ரேல் தூதரகம் இந்த செயலுக்கு வருத்தம் தெரிவித்துள்ளதோடு மட்டுமல்லாமல், மன்னிப்பும் கோரியதோடு இந்த சம்பவத்துக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சிங்கப்பூர் அரசு வெளியிட்டுள்ள செய்தியில், தேசியக்கொடியை அவமதிப்பது குற்றமாகும், ஆனால் இஸ்ரேல் அரசு மன்னிப்புகேட்டுக்கொண்டாலும், இந்த செயலுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக்கூறியுள்ளது.

## பாரியளவு நீர்த்தேக்கத்திற்காக ஒப்பந்தம் கைச்சாத்து

நைல் நதி பாயும் பகுதியில், நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான விவகாரத்தை ஆராய்வதற்காக, எகிப்து, எதியோப்பியா, சூடான் ஆகிய நாடுகள், ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன என, எதியோப்பியாவின் வெளிநாட்டு மற்றும் நீர் அமைச்சர்கள் தெரிவித்தனர்.

4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில், மாபெரும் நீர்த்தேக்கமொன்றை உருவாக்குவதற்கு, எதியோப்பியா முயன்று வருகின்றது. ஆனால், இது தொடர்பில், தர்க்கங்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU



# தாயகச் செய்திகள்

## சர்வதேச விமான நிலையமாகும் பலாலி விமான நிலையம்

**பலாலி**


பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. ஆனால், இதற்காக மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது என இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

மேலும் அவர், வடக்கில் குறிப்பாக பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு பல்வேறு தரப்பினரும் சாதகமான கருத்திலுள்ளனர். ஆனால் அவ்வாறு மாற்றுவதற்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை.

இதனைத் தெளிவுபடுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்த நிலையில் தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

குறிப்பாக பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்தில் மாற்றுவதற்கு விமான ஓடு பாதைகள் உட்பட பல அபிவிருத்திகளைச் செய்வதற்கு நிலப்பரப்பு தேவையாக உள்ளது. இதற்காக மக்களின் காணிகள் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்ற போதும் நாம் பல பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பயனாக மக்களின் காணிகளை சுவீகரிக்காது கடற்கரையோரங்களில் மண்ணை நிரப்பி அதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் இதற்கான திட்ட முன்மொழிவுகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்று உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார்.



## வலிகாமத்தில் வதை கூடங்கள் இருந்திருக்கலாம் என சந்தேகம்

**வலிகாமம்**

இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து கடந்த 29ம் திகதி விடுவிக்கப்பட்ட பளை, வீமன்காமம் வடக்குப் பகுதியதில் அமைந்திருந்த இராணுவத்தின் பாரிய படைமுகாமிற்குள் வதை கூடங்கள் இருந்தமைக்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த படைமுகாமிற்குள் இருந்த மக்களுடைய வீடுகளுக்குள்ளே மாற்றங்கள் செய்யப்பட்டே இவ்வாறான வதை கூடங்களாக பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்ட தடயங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வறைகளுக்குள்ளே இருப்பவர்கள் வெளியில் தப்பித்துச் செல்ல முடியாதவாறும், வேறு ஒருவருடைய உதவி இல்லாமல் வெளிவரவும், வெளிப்புறத்தில் நடப்பவற்றினை தெரிந்து கொள்ள முடியாதவாறு அமைக்கப்பட்டுள்ளது.

அவ்வறைகளுக்குள்ளேயும், அதற்கு வெளியேயும் உள்ள வேறுசில தடயங்களை வைத்துப் பார்க்கும் போது அவ்வறைகள் வதைகூடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இராணுவம் விடுவித்த பகுதியில் இருந்த பாடசாலையின் சுவரில் தனது மகனின் கையெப்பம் இருந்ததையும் சாட்சியமளித்தவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் காணாமல் போனவர்கள் இவ்வாறான இராணுவ முகாங்களில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.






## பேருந்து நடத்துனர்கள் ஆர்ப்பாட்டத்தில்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேரூந்துகள் மீது நடத்தப்படுகின்ற கல்வீச்சுத் தாக்குதல்களைக் கண்டித்து யாழ்ப்பாணம் மத்திய பேரூந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை கறுப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கி பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேரூந்துகள் மீது கடந்த வியாழக்கிழமை கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் பருத்தித்துறை மந்திகை சந்திக்கு அருகில் வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ள தாக பருத்தித்துறை காவல்துறையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு அடிக்கடி நடத்தப்படுகின்ற தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு



## நிலக்கீழ் நீருடன் கடல் நீர் கலப்பு

**வட மாகாணம்**

**யா**ழ். குடாநாட்டின் நிலக்கீழ் நீருடன் கலக்கும் கடல் நீரின் அளவு அதிகரித்துள்ளதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் குடிநீர் மாசடைந்துள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பூகோளவியல் தொடர்பான முன்னாள் பேராசிரியர் செனவி எப்பிட்டவத்த குறிப்பிட்டுள்ளார்.

இதனால் நிலத்திற்கு அடியிலுள்ள சுன்னக் கற்பாறைகள் கரைவதனால் கடல் நீர் நிலத்தினுள் கசியும் தன்மையும் அதிகரிக்கும்மென பேராசிரியர் கூறினார்.

காலநிலை மாற்றத்தின் காரணமாக எதிர்வரும் 8 வருடங்களில் யாழ். குடாநாட்டிலுள்ள நீரை அருந்த முடியாதநிலை ஏற்படும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையை எதிர்கொள்வதற்காக மழை நீரைப் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வன்னி மாவட்டத்தின் தலைவராக கே.கே.மஸ்தான்

**வன்னி மாவட்டம்**

**வ**வுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி குழுக்களின் இணைத்தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தினால் பாராளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக்களின் தலைவர் மற்றும் இணைத்தலைவர் பதவிகள் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டு வரும் நிலையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் மூன்று மாவட்டங்களின் பிரதேச மட்ட அபிவிருத்தி குழுக்களின் இணைத் தலைவராகவும், மூன்று மாவட்டங்களின் அபிவிருத்தி குழுத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

**யாழ்ப்பாணம்**

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை அறுவரையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து ஒரு விசைப்படகில் வந்து, மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள், கடந்த 19ஆம் திகதி காங்கேசன்துறை கடற்கடையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை-யினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இருப்பினும் 2014 இனை விட 2015இல் கைதாகியோரின் எண்ணிக்கை குறைவு என தெரியவருகின்றது.

## இராணுவத்தினர் பாவிக்கு பாதை திறப்பு நா.உ சாந்தி சிறிஸ்கந்தராஜா

**கோப்பாவிலாவு**

**இ**ராணுவத்தினர் உபயோகப்படுத்தி வருகின்ற வற்றாப்பளை கேப்பாப்பிலவு வீதி புனரமைப்பு தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்காந்தராசா தெரிவித்துள்ளார். மீள்குடியேற்றம் இடம்பெற்று ஆறு வருடங்கள் கடந்தும், மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படாது இராணுவத்தினர் மாத்திரம் பயன்படுத்தி வருகின்ற புதுக்குடியிருப்பில் இருந்து கேப்பாப்பிலவினூடாக வற்றாப்பளை செல்கின்ற மூன்று கிலோ மீற்றர் வரையான வீதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் புனரமைக்கப்படவுள்ளது. இவ்வீதியானது மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாத நிலையில், அவர்கள் மாற்று வழியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் காப்பெட் வீதியாக தரமுயர்த்தப்படவுள்ள வற்றாப்பளையில் இருந்து கேப்பாப்பிலவு வரையான வீதி புனரமைக்கப்பட்டதன் பின்பு மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டு பொதுமக்களின் சுமூகமான போக்குவரத்துக்கும் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## பேச்சற்றுப்போய்

எதுவும் பேசாத மௌனம்
நீண்டு... நீண்டு
எம்மிடையே நீண்டு போகும்!

நீட்சி
நிமிடங்களிற் தொடங்கி
வருடங்களாகும் - வரை
மௌனம்

விழிகளூடே பாயும்
உணர்வுகள்
பரிமாறும்
உயிரை.. நீ
நானாகி - நான்
நீயாகிப் பின்
நாமாகி..

எதுவுமற்றுப்
போவோம் - இப்
பிரபஞ்ச உலகில்

எதுவுமற்றுப்
போனபின்பும்

இம் மௌனம்
தாங்கி நிற்கும்
நம்
காதலை ...

உலகில்
காதலாகிப் பேசாதிருக்கும்
மாந்தரிடையே
நிலவும் மௌனத்தில்

நானும் நீயும்
நம் காதலும்

மௌனமொழியாய்

அகவைகள் தாண்டி
ஆண்டுகள்...
ஆண்டுகளாய் வாழ்வோம்...

மாயன்

## ஜெகம் போற்றும் பாரதி செந்தமிழ்ப் பிரியன்

சேனையூரான் -
மூதூர் கிழக்கு



புரியும் தமிழில்: பாரதி
புனைந்த கவிதைகள்
புரந்து விரிந்து இந்த
பாரெல்லாம் புகழவாழுது!
புரட்சிக் கவிஞன்: பாரதி
புதுமைப் புலவன்
உணர்ச்சிக் கவிஞன்: பாரதி
உன்னதத் தமிழன்!
புகழ் பூத்தகவிஞன்: பாரதி
புலவர்க்கும் புலவன்
ஜெகம் போற்றும் பாரதி
செந்தமிழ்ல் பற்றாளன்!
விடுதலைப் பாக்களை: பாரதி
விதைத்திட்ட வீரன் பாரதம்
விடுதலை பெறுவதற்கு
பாடுபட்டுழைத் தவன்!
தீர்க்க தரிசியாய் பாரதி
செப்பிய பாடல்கள்
நீரின்மேல் படைப்பல்ல
கல்லின் மேல் பதித்தவைகள்!


## ஒன்றிரண்டு?

கண்டற் காடு முன்னைநாள்
கலகலத்து நின்றதே!
கண்டிருப்பர் திடல்களில்
காய்கறிப் பயிர்களே!

கோடை மாட்டுக் காலைகள்
குறைவிலாதபால் - தயிர்
ஆடை- மத்து- வெண்ணெய்- நெய்-
ஆறாச்சோறு கடுகுடன்!

இரவு சூட்டுப் பா இசை-
எருமைக்கடா மிதிப்புகள்
விரையுங்காற்றில் தூற்றுதல்-
வெறுமைச் சாக் கில்கட்டுதல்!

வள்ளம் நெல்லு மூடைகள்-
வண்டில் மாட்டுப் பாய்ச்சல்கள்!
உள்ளதின்று கண்டாலும்,
ஒன்றிரண்டு காடுமே!



தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

## ஆரம்பமும் முடிவும்

ஒரு வெகு தூரப் பயணம்
எழுத்து வடிவத்தில்
கருத்து சுமந்து
வருகின்ற
ஒரு தேசத்து
மடல்
ஆயுதம் கொண்டு
போர் செய்யும்
போராளிகளின் போர்
முடிந்து போகலாம்
பாலைவனமும்
ஈரம் காணலாம்
தாய் மடி தேடி
குழந்தையும்
பாசம் தேடலாம்
புழுதி மண்ணும்
புயல் காற்றில்
ஒரு செய்தி
வாசிக்கலாம்
ஒரு நல்ல நீதிபதியும்
நாட்டில் நல்ல
மனிதர்களும்
பூமி பிழந்து
மண்ணுக்குள் நுழைந்து
போகலாம்
மண் என்னுடையது
என்று சொல்லி
மனிதர்களை அழிக்கலாம்
ஆனால் - ஒரு
நல்ல எழுத்துக்கு
ஒரு வரலாறு
சுமந்து போவதும்
எழுத்தில் தான்
முடிவு என்பதும்
இன்னும் சமூகத்திற்கு
விளங்காத - ஒரு
மௌனம்
ஆட்சி செய்தாலும்
கடைசி எழுத்தில் தான்
ஆரம்பமும் முடிவும்

ஜே.எம்.முஸம்மில்
இறக்கக் கண்டி




## இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)

இவை குகைகளுடன் தொடர்புடைய பிராமியில் அமைந்த சாசனங்களாகும். பிராமணர்கள் பற்றிய குறிப்புகளைக் தரும் இச்சாசனங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

- **குகை உரிமை தொடர்புடையவை**
- **குகைத்தானம் தொடர்புடையவை**
- **பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்ற பிராமணர்கள் தொடர்புடையவை**



பிராமிச்சாசனங்களில் சில குகைகளின் உரிமையாளராக பிராமணர்களைக் குறித்து நிற்கிறது. அனுராதபுரம் யாங்கல என்ற இடத்தில் கிடைத்த சாசனம் கோஸிகன் என்ற பிராமணனின் மகன் விஜிதஸேனனின் குகை அதுவென அடையாளம் காட்டுகிறது. உத்தர என்ற பிராமணனின் மகன் குட்ட என்பவனின் குகை அனுராதபுரம் றிற்றிகல அன்டியகந்த என்னும் இடத்தில் இருக்கிறது. அம்பாந்தோட்டையின் மண்டகல என்ற இடத்தில் பூதி எனும் பிராமணனின் குகையும், கொஸிதுல்பவுவ என்ற இடத்தில் வச்ச என்ற பிராமணனது குகையும் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டியிலுள்ள பம்பறகல என்ற இடத்தில் பிராமணப்பெண் தத்த என்பவளது குகை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பெண் கொஜற என்ற பிராமணனின் மகள் என்பதுடன் நாக அரசன் பொசனி என்பவனின் மனைவி என்பதை பிரமிச்சாசனம் உறுதிப்படுத்துகிறது. பிரமிச்சாசனங்களில் பெரும்பாலானவை குகைதானம் தொடர்பானவை. இவை பிராமணர்களால் பௌத்த சங்கத்துக்கு குகை தானமளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. ஆரம்பத்தில் இருந்தே பௌத்தம் அரச ஆதரவுடன் பரப்பப்பட்டுக் கொண்டிருந்தமையால் பிராமணர்கள் சுயவிருப்பின் பெயரில் இத்தானங்களை மேற்கொண்டார்களா? இல்லை தானமளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்களா? என்பதைப் புரிந்துகொள்வது கடினமானது. எனினும் பௌத்த மத வருகையின் பின்னர் சரிந்து சென்ற தமது செல்வாக்கினை நிலைநிறுத்த பிராமணர்கள் முயன்றிருக்கிறார்கள் எனக் கருத இடமுண்டு.

ராஜகிரிகந்த (அனுராதபுரம்) இல் பிராமணன் மகன் "ரெத" என்பவனின் குகையும். ஹந்தகல விகாரையில் பிராமணன் மகன் புஸ்ஸதேவனின் குகையும், ஸிதுல்பவுவ (அம்பாந்தோட்டை) இல் கோதம என்ற பிராமணனின் குகையும் தோங்கலவில் (அம்பாறை) அதிமதக என்ற பிராமணனின் குகையும் பௌத்த சங்கத்திற்கு கொடுக்கப்பட்டதை சாசனங்கள் மூலம் ஆதாரப்படுத்த முடிகிறது.

குகைதான சாசனங்களில் தானம் கொடுத்த பிராமணர்களின் சமூக நிலையுடன் தொடர்புடையது மூன்றாவது வகை. இங்கு தானம் அளித்த பிராமணர்களை பிராமிச்சாசனங்கள் பருமகர் (பிராகிருத மொழியில்) என அழைக்கின்றது. இதன் தமிழ் வடிவம் பருமகன் அல்லது பெருமகன் என்பதாகும். பெருமகன் என்னும் சொல் சங்க நூல்களில் குடிமக்களின் தலைவரைக் குறிக்கப் பயன்படுவதாக உள்ளது. இவர்கள் சிற்றரசர்களாக, அமைச்சர்களாக, வரிவசூலிப்-பவர்களாக, படைத்தளபதிகளாக, வணிகர்களாக, அரச தூதுவர்-களாக இருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தியபத்த விகாரையில் (குருநாகல்) மொக்கலி என்ற பிராமணனின் மகனும் பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தவருமான மஜ்ஜிம என்பவனின் மகன் தத்தவின் குகை தானமளிக்கப்பட்ட செய்தி இருக்கின்றது. அதுபோல பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த திஸ்ஸ என்ற பிராமணனின் குகை தம்புள்ளையிலும், பருமகர் என்ற பட்டம் பெற்ற ஸுரிய எனும் பிராமணனின் மகன் தத்தக என்பவனின் குகை மொலகொடவிலும் (கண்டி) பௌத்த சங்கத்துக்கு தானமாக வழங்கப்பட்டதை அறியமுடிகிறது.

தொடரும்.. .. ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவதைப் பெறுவதா?.. தேவையைப் பெறுவதா?...

தமிழ் தேசிய பேரவை உருவாகிய நாள் முதல் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பேச்சாடல்கள் நிலத்திலும் புலத்திலும் உயிர்ப்பு நிலையில் இடம்பெறுகின்றன.

இப்பேச்சாடல்கள் முறையே ஈழத்தமிழர்கள் தமக்காகத் தாமே பேசுவதாகவும், தமிழர்களுக்காக குரல் கொடுத்து வருபவர்கள் பேசுவதாகவும், ஈழத்தமிழருக்கு எதிரான தரப்பினர் பேசிக் கொள்ளுவதாகவும் வெவ்வேறு-பட்ட மூன்று பரிமாணங்களில் நிகழ்கின்றதை அவதானிக்க முடிகின்றது.

இப் பரிமாணங்களுள் முதலாவதும் மூன்றாவதும் பரிமாணங்கள் ஆழமாக நோக்கப்பட வேண்டியவை.

அதேவேளை தமிழ் தேசியப் பேரவையின் உருவாக்கம் முதலிரு பரிமாணங்களின் மீதும் சார்பு மற்றும் எதிர் நிலைகளை தோற்றுவிப்பதுடன் இறுதித் தரப்பின் மீதும் கடும் எதிர்நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது.

சற்று விரிவாக நோக்கினால் ஈழத்தமிழர்கள் மற்றும் தமிழருக்கு சார்பாக பேசுபவர்கள் இரண்டாக பிரிந்து தமிழ் தேசிய பேரவையின் உருவாக்கம் சாதகமானது என்றும் பாதகமானது என்றும் நிலைப்பாடுகளை உருவாக்கி வாதித்துக் கொள்ள, பேரினவாதச் சிந்தனைகளைக் களைய முடியாது. நல்லாட்சி என்ற போர்வையை போர்த்தியிருக்கும் கூட்டரசின் உறுப்பினர்கள் தமிழ் பேரவையின் மீது கடுமையாக இனவாதச் சாயங்களையும் பூச முனைகின்றனர்.

தமிழர்களின் தீர்வுக்கான முயற்சிகள், பேரினவாதிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டுத் தமிழர்களால் சுயமாக எப்போதெல்லாம் முன்மொழியப்படுகின்றதோ, அப்போதெல்லாம் அம்முயற்சிக்கு இனவாதச் சாயம் பூசுவது வழமையான பேரினவாதச் சிங்கள வரலாறு என்பதால் அதைப்பற்றியதான ஆய்வு பின்தள்ளிப் போடக்கூடியதாகவே உள்ளது.

ஆனால் யாருடைய நலன் சார்ந்து தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப் -பட்டுள்ளதாக அப்பேரவையின் மத்திய குழுவினர் அறிவித்துள்ளனரோ அம்மக்களும், அம்மக்களால் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைகளும் தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராகவும் ஆதரவாகவும் இரண்டுபட்டிருப்பது ஏன்?

இதனை ஆராயும் போதே, ஈழத்தமிழரின் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறைகள் இரண்டுபட்டிருப்பதும் அதன்பாற்பட்டே தமிழர்களும், அவர்களின் தேர்தல் தலைவர்களும் இரண்டாகி நிற்பதும் தெளிவாகியுள்ளது.

தமிழர்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையானது ஒன்றில் தருவதைப் பெற்றுக்-கொள்வதாக அல்லது தேவையானதைப் பெற்றுக்கொள்வதாக இரண்டு-பட்டுள்ளது.

இவ்விரண்டு செயன்முறைகளிலும் ஏதாவது ஒன்றின் மூலம் மட்டுமே தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் தருவதைப் பெற்றுக்கொள்வது என்ற செயன்முறை மிக நியாயமாக நடைபெற்றிருக்குமானால் இலங்கைத் -தீவில் என்றுமேயொரு யுத்தம் - சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளவதற்கானதொரு அரசியல்-ஆயுதப் போராட்டம் உருவாகி நடைபெற்றிருந்திருக்காது.

ஆனால் 2009 மே மாதம் தமிழரின் வீரஞ்செறிந் ஆயுதப் போர் முடிவிற்கு வந்ததை அடுத்து தருவதைப் பெற்றுக்கொள்வதே சிறந்த வழி என்றதொரு வாதம் வலுப்பெறத் தொடங்கியது.

தருவதைப் பெற்றுக்கொள்வதே சிறந்தது என்ற வாதம் வலுப்பெற இரண்டு காரணிகள் பெரும் பங்காற்றின.

முதலாவது மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற போரால் ஈழத் தமிழர்கள் படிப்படியாகத் தமது இயல்பு வாழ்வையும், உறவுகளையும், பொருளாதாரத்தையும் தயவு தாட்சண்யமின்றி இழந்தமை.

இரண்டாவதாக தேசிய இனமான தமிழினம் தனக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் போரை நடாத்திக்கொண்டிருக்கச் சிறுபான்மை இனங்களுள் ஒன்றான முஸ்லிம் இனம் அரசுடன் இணைந்து அடைந்த அசாத்திய வளர்ச்சி.

இவ்விரு காரணிகளாலும் ஈழத்தமிழரிடையே ஒரு பிரிவிடம் தருவதைப் பெற்றுக்கொள்வதே சாலச் சிறந்தது என்ற வாதம் வலுத்து நிலைபெறத் தொடங்கியது.

இவ்வாறு ஒரு பிரிவினரிடையே எழுந்த கருத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பேரினவாத அரசு அக்கருத்தை-யுடையவர்களைப் போசித்து வளர்க்கத் தொடங்கியதுடன் அக்கருத்தை ஏற்றுக்-கொள்ளாதவர்களைப் புறந்தள்ளி, அவஸ்தைப்பட வைத்தது.

இவ்வாறு தருவதைப் பெற்றுக்கொள்ளும் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் போராடத்-தொடங்கி புறந்தள்ளப்பட்டவர்களுள் அகப்பட்டுக்கொண்டவர்கள் தான் சிறையில் வாடும் அரசியல் கைதிகளும், மக்ஸ்வெல் பரணகமவின் தலைமையில் உருவாக்கப்பட்ட காணமலாக்கப்பட்டோரைக் கண்டறியும் ஆணைக்குழுவிற்கு எதிராகப் போராடியவர்களும், இறுதியாக வித்தியாவின் வன்கொலைக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடக்கி யாரோ திட்டமிட்டு மேற்கொண்ட வன்முறைகளுக்குப் பலியாகிச் சிறையில் வாடிய நியாயமான போராட்டக்காரர்களும்.....

அதாவது போராடினால், நீங்கள் கேட்பது சரியானதாகவும், நியாயமானதாகவும், புத்த தர்மத்திற்கு அதர்மமானதாக இல்லாதிருந்தாலும் கூடக் கிடைக்காது. ஆனால் நாம் தருவதைப் பெற்றுக்கொண்டு, உங்களுக்குத் தேவையானதை எதிர்பார்க்காமல் வாழப்பழகுங்கள் என்பதன் சூசகசமான கருத்தாகும்.

2009ம் ஆண்டின் பின் தமிழர்களால் தேர்வு செய்யப்பட்ட தலைமைகளும் இக்கருத்திற்குப் பலியாகிப் போய்விட்டமையே மிகுந்த சோகமானது.

புதிய ஆட்சியாளர்களின் மீது நம்பிக்கை வைத்து, எமது நம்பிக்கையை அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சிங்கக் கொடியைக் கையிலேந்தியும், எமது ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டத்தை நாமே பயங்கரவாதப் போராட்டம் என்று அறிக்கையிட்டும், புறக்கணிக்கவேண்டிய சுதந்திரதினக் கொண்டாட்டங்களிற் கலந்து கொண்டும், உள்ளங்களால் ஆட்சியாளர்களுடன் இணைந்திருக்கின்றோம் என்று வெளிப்படுத்தியும் மேற்கொண்ட சாணக்கிய நகர்வுகள் என்று கூறப்பட்டவை யாவும் பேரினவாத நிலைப்பாடு என்ற இரும்புக் கோட்டையின் மீது மோதி முனை நசுங்கி விழுந்துவிட்டன.

இவ்வாறு கடந்த ஆறு அண்டுகளில் "தருவதைப் பெற்றுக்கொள்ளும்" மனநிலையைப் பகீரதப்பட்டு உருவாக்கி வரும் பேரினவாதச் சிந்தனைக்கும், அதற்குப் பலியாகிப்போன மக்கள் தொகுதிக்கும், தன்னிச்சையாகவே அக்கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்ட தமிழ் அரசியல் தலைமைக்கும் இடையே உருவாகிவந்த இணைந்த அமைதிக்கு மாற்றுக் கருத்தாக "தேவையைப் பெற்றுக்கொள்ள " முயற்சிக்கும் அமைப்பாக உருவாகியுள்ள, தற்போதுவரை மக்கள் மயப்படுத்தப்படாத தமிழ் மக்கள் பேரவை அமைந்துள்ளது.

"புதிய ஆட்சியாளர்களின் மீது நம்பிக்கை வைத்து, எமது நம்பிக்கையை அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சிங்கக் கொடியைக் கையிலேந்தியும், எமது ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டத்தை நாமே பயங்கரவாதப் போராட்டம் என்று அறிக்கையிட்டும், புறக்கணிக்கவேண்டிய சுதந்திரதினக் கொண்டாட்டங்களிற் கலந்து கொண்டும், உள்ளங்களால் ஆட்சியாளர்களுடன் இணைந்திருக்கின்றோம் என்று வெளிப்படுத்தியும் மேற்கொண்ட சாணக்கிய நகர்வுகள் என்று கூறப்பட்டவை யாவும் பேரினவாத நிலைப்பாடு என்ற இரும்புக் கோட்டையின் மீது மோதி முனை நசுங்கி விழுந்துவிட்டன."



ஈழத்தமிழர் பிரச்சனைக்கு எத்தீர்வு உண்மையான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் எனத் தமிழர்கள் முன்மொழிகின்றார்களோ அத்தீர்வை உலகெங்கும் எடுத்துச்சொல்லத் தக்கவகையில் அமைந்துள்ளதே தமிழ் மக்கள் பேரவை.

இந்நிலையில் தமிழர்களின் தீர்விற்கான இரண்டாவது தளமான எமக்குத் தேவையான தீர்வை நாமே கேட்டுப் பெற்றுக்கொள்ளல் என்ற தளத்தைத் தமிழ் மக்கள் பேரவை திறந்துவிட்டுள்ளதால், "தருவதைப் பெற்றுக்கொள்ளத் தயாராகிவிட்ட" முதலாவது தளத்தில் உள்ளவர்கள் தமக்கு எதிராகவே தமிழ் மக்கள் பேரவையை அவதானிக்கவும் கருத்துரைக்கவும் தொடங்கிவிட்டனர். [illegible] தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்தையும் அதன் நோக்கத்தையும் செய்றபாடுகளையும் பொறுத்திருந்து பார்க்க முடியாத அனைவரும் உடனடியாகவே தமிழ் மக்கள் பேரவை மீது சேறு பூசத் தொடங்கியிருப்பதை நாம் காண்கின்றோம்.

மற்றொரு தளம் திறக்கப்பட்டிருப்பது தமது தளத்திற்கும் மேலும் வலுவூட்டவல்லது என்பதைப் புரிந்துகொள்ளவும், பேரம்பேசும் ஆற்றலை அதிகரிப்பதற்கு ஒரு தளத்திற்க மற்றொரு தளம் உதவும் என்பதைப் புரிந்துகொள்ளவும் தடைப்பட்டு நிற்கின்றோம்.

எவ்வாறு முஸ்லிம்கள் பல்வேறு தளங்களைத் திறந்த தமது பேரம்பேசும் ஆற்றல்களை அதனூடாக வளர்த்துக்கொண்டனர் என்பதையிட்டுச் சிந்திக்காமல் இருப்பதைத் தனக்குச சாதகமாக்கிக்கொள்ளப் பேரினவாதச் சிந்தனை தயாராகி விட்டது. அதற்காக தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக உருவாகும் கருத்துக்களுக்குத் தூபம் போடவும் தயாராகிவிட்டது.

தமிழர் பிரச்சனைக்கான தீர்வைக்காணவிழையும் இரண்டு நிலைப்பாடுகளையும் அதனதன் தளத்தில்வைத்துத் தெளிவாகப் புரிந்துகொண்டால் மட்டுமே தமிழ் மக்கள் பேரவையின் தேவை இந்நிகழ் காலத்தில் ஏன் ஏற்பட்டுள்ளது என்பதைச் சரியாக எடையிட்டுக் கொள்ள முடியும்.

இரண்டாவது தளமொன்றுக்கான இடைவெளி மிக நீண்டகாலமாக உணரப்பட்டுள்ள நிலையில் இவ்விரண்டாவது தளத்தைத் திறந்துவிட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை அந்த இடைவெளியை நிரப்புமா என்பதை உடனடியாக எடையிட முடியாது.

ஆனால் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் புதிய அரசியலமைப்பிற்கான முன்மொழிவைச் செய்ய வேண்டியிருப்பதால் தமிழ் மக்கள் பேரவையின் வலுவைத் தெரிந்துகொள்ள முடியும் என்றே நம்பலாம்.

– மாயன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 85

# "கலகலப்பாக தோற்றமளித்தல்"

(வி.என்.சந்திரகாந்தி)



வாழ்வியல் வாசக நெஞ்சங்களே! மலர்ந்துள்ள 2016 ஆம் ஆண்டு உங்களுக்கு கலகலப்பாகவும் மகிழ்சியாகவும் மலர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நம் அனைவரினதும் விருப்பமே மற்றவர்கள் முன்பாக கலகலப்பாக தோற்றமளிக்க வேண்டுமென்பதே! ஆனால் அதை நிறைவேற்றுவதுதான் எமக்கு இயலாத காரியமாக போய்விடுகின்றது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்□ என்பார்கள். அங்குதான் பிரச்சனையே இருக்கின்றது. மன அமைதியும் குதூகலமும் இருந்தால் தான் முகத்தில் புன்சிரிப்பு தோன்றும். அதன்பின்பு தான் கலகலப்பாக பேசுவதும் சரி மற்றவர்களை அரவணைத்து அன்பு பாராட்டுவதும் சரி இயலுமானதாகும்.

மனதை வெறுமையாக வைத்துக்கொள்வதற்கு நாம் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நல்ல இரவுத் தூக்கம் எமது மன சோர்வுகளை எல்லாம் போக்கடித்துவிடும். சிறிய கவலைகளை கெட்ட கனவுகளாக மறந்துவிட வேண்டும். சற்று யோசித்து பாருங்கள் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணமே எமக்கு எவ்வாறான மகிழ்ச்சியை தருகின்றதென.

துயிலெழுந்ததுமே உங்கள் மேல் அன்பானவர்களுக்கு காலை வந்தனம் கூறுங்கள். பதிலுக்கு அவர்களும் உங்களை வாழ்த்தும் போது நீங்கள் சொக்கிப்போய் விடுவீர்கள். முகம் கழுவாவிட்டால் கூட பரவாயில்லை. உங்கள் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி என்று வீட்டில் உள்ள உங்கள் மேல் பிரியமுள்ள உறவுகளை அணைத்து அன்பு பாராட்டுங்கள். அவர்கள் பாசத்துடன் உங்கள் முதுகை தட்டிக்கொடுக்கும் போது இந்த உலகத்தையே வென்று விடுவேன் என்ற மனதைரியம் உங்களுக்கு ஏற்பட்டு விடும்.

இப்போதுதான் "எஸ்.எம்.எஸ்□ வசதி இருக்கவே இருக்கின்றதே! உலகம் பூராகவும் பரந்துள்ள உங்கள் நண்பர்களில் ஓரிருவருர்க்காயினும் "குட் மோனிங்" என்று குறுஞ்செய்தி அனுப்புங்கள். முகநூலில் உங்கள் நண்பர்கள் அனைவரையுமே ஒரே வசனத்தில் வாழ்த்தி விடலாமே!

வெளிநாடுகளிலெல்லாம் நலன் விசாரிப்பதை ஒரு நாகரீகமாக வளர்த்துக் கொண்டுள்ளார்கள். நலம் விசாரிக்கப்படுகின்றவர்களும் பதிலுக்கு நலன் விசாரிப்பார்கள். கை குலுக்கி கொள்வது கூட நட்பின் அடையாளம்தான். என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை என்பதை தெரிவிக்க அது ஒரு வழிமுறை ஆகின்றது.

ஆள்பாதி ஆடைபாதி என்று சொல்வார்கள். மனதிற்கினிய வர்ணங்களினால் . ஆன ஆடைகள் மனநிறைவைத்தரும். பிறர் முன் நாம் அழகாக ஆடையணிந்து தோற்றமளிக்கின்றோம் என்ற நினைப்பே எமக்கு மகிழ்ச்சியையும் கலகலப்பையும் உண்டுபண்ணும். இன்னும் சொல்லப் போனால் நீங்கள் உடையணிந்திருக்கும் விதத்திற்காக உங்களை மற்றவர்கள் மனம் திறந்து பாராட்டும்போது உங்கள் உற்சாகம் கரைபுரண்டோடும். ஒரு கலந்துரையாடல் நிகழ்வாக இருக்கட்டும் அல்லது பயிற்சி பட்டறையாக இருக்கட்டும் நன்றாக ஆடை அணிந்திருப்பவர்களே அங்கு பிரகாசிக்கின்றார்கள்.

நாம் மற்றவர்களை அன்புடன் விளிக்க தெரிந்திருக்க வேண்டும். ஒரு முறை சந்தித்தவரை திரும்ப சந்திக்க நேர்கையில் அவர் பற்றிய உங்கள் நினைவலைகளை அவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருவர் உங்களுக்கு உதவியோ ஒத்தாசையோ புரிந்திருந்தால் அதற்காக இப்போதும் நன்றி தெரிவியுங்கள். உங்கள் சக்திக்கேற்ப ஒரு சிறிய பரிசை அது ஒரு பேனாவாகவோ சிறிய நூலாகவோ கூட இருக்கலாம். உங்கள் மனம் கவர்ந்தவர்களுக்கு வழுங்கலாம். அந்த நன்றி உணர்வின் வயப்பட்டே அவர்கள் உங்களுக்கு எங்கும் எப்போதும் முன்னுரிமை தருவார்கள்.

உங்கள் வாயிலிருந்து நீங்கள் உதிர்க்கும் சொற்கள் நன்கு சிந்தித்தவையாக இருக்க வேண்டும். அதாவது இன் சொல்லே எப்போதும் மற்றவர்களை கவரும். நீங்கள் தெரிவிக்கும் செய்திகள் கூட நல்லவையாக இருந்தாலே பிறர் அவற்றை உற்றுக்கேட்டு மனதில் பதிப்பர்.



நீங்கள் பங்கு கொள்ளும் உலகம் மகிழ்ச்சி நிறைந்ததாக மட்டும் இருக்கட்டும். அப்போதுதான் நீங்கள் கலகலப்பாக தோற்றமளிக்க முடியும்.

"விருந்து□ என்ற சொல்லை நாம் இப்போதெல்லாம் மறந்து விடுகின்றோம். அப்படி இல்லை என்றாலும் ஒரு பிரியாவிடை உபசாரம் பாராட்டுவிழா என்று அலுவலக மட்டத்திலேயே முடிந்து விடுகின்றது. உண்மையான விருந்து என்பது அதுவல்ல. எமது உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்து விருந்துவைக்க வேண்டும். அதுவே அவர்கள் எங்களை மதிப்பதற்கும் அதிகளவு அன்பு பாராட்டுவதற்கும் ஏதுவாக அமையும். எம்மை அறியாமல் நாம் ஏதாவது சிறு தவறை புரிந்திருந்தாலும் அப்படியான விருந்துகள் அவற்றை மறக்கடிக்க செய்துவிடும். மறுவளமாக நாமும் மற்றவர்களால் விருந்துக்கு அழைக்கப்படும்போது எமக்கு புதிய உறவு வட்டமும் நட்பு வட்டமும் உருவாகின்றது. அது எமது காரிய சித்திக்கும் வெற்றிக்கும் வழிவகுத்து உற்சாகத்தை வழங்கும்.

விருந்து உபசாரம் போன்றே நாம் இப்போதெல்லாம் சுற்றுலா செல்வதை அதிகளவில் தவிர்த்து வருகின்றோம். நாம் எமது சம்பாத்தியத்திற்காக தொழில் புரிவதிலுள்ள களைப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கு சுற்றுலா ஒரு நல்ல வழியாகும். உடல் ரீதியான களைப்பு மட்டுமன்றி மன ரீதியான சோர்வையும் அது போக்குகின்றது. புதிய நட்பு வட்டத்தை ஏற்படுத்துகின்றது. புதிய புதிய இடங்கள் இயற்கை காட்சிகள் புது முகங்கள் எல்லாமே எமக்கு உற்சாகத்தை உண்டுபண்ணு-கின்றன. சுற்றுலாவின் போது நாம் அனைவரும் இணைந்து அருவியிலோ குளத்திலோ குளிக்கின்றோம். எம்முடன் எடுத்துச் சென்ற சமையல் பாத்திரங்-களில் அனைவரினதும் பங்களிப்புடன் சமையல் செய்து ஒன்றாக அமர்ந்து ஒருவருக்கொருவர் அன்புடன் பரிமாறி சாப்பிடுவதில் கொள்ளை மகிழ்ச்சி உண்டாகின்றது. அந்நேரத்தில் கோயில்களை தரிசிப்பது, வரலாற்று தலங்களை பார்வையிடுவதெல்லாம் எமது அறிவை விருத்தி செய்யும்.

நாம் மற்றவர்களுடன் பழகும் போது அவர்கள் மனம் நோகும் வண்ணம் நடக்கக் கூடாது. நாகரீகத்தை பேணவேண்டும். அவர்களது அனுமதியுடனேயே அவர்கள் சார்ந்த விடயங்களில் பங்கு கொள்ள வேண்டும். நாம் எப்போதும் புனைவுகளின்றி வெட்ட வெளிச்சமாக நடக்க வேண்டும். அப்போதுதான் எம்மால் அவர்களது மனத்தில் இடம் பிடிக்க முடியும். எமது உறவு வட்டங்களுக்கோ, நட்புவட்டங்க-ளுக்கோ ஏதாவது பிரச்சனை என தெரிந்தவுடன் சென்று உதவி புரிய வேண்டும். உறவை பேணுவதற்கு அதைவிட சிறந்த வழி எதுவும் இல்லை.

உங்களை பிறர் தப்பாக எடைபோட இடமளிக்காதீர்கள். நீங்களும் மற்றவர்-களை தப்பாக எடைபோடாதீர்கள். நேருக்கு நேர் பேசுவதன் மூலம் அவ்வப்போது சந்தேகங்களை அகற்றிக்கொள்ளுங்கள். ஒரு போதும் பயம் கொண்டு ஒதுங்காதீர்கள். உங்கள் மீது கோபத்திலிருக்கும் ஆசிரியராயினும் சரி, உங்களை குற்றம் கண்டு பிறருடன் குறை பேசிய நண்பனாயினும் சரி, அவர்களை நேரில் சந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்துகொள்ளுங்கள். மனதில் சந்தேகங்களை வைத்துக் கொண்டு கலகலப்பாக இருக்க முடியாதல்லவா? எனவே மனதை குடையும் விடயங்களை உடனே தீர்த்துக்கொள்ளுங்கள்.

கலை எப்போதும் அனைவரையும் கவருவதாக இருக்கின்றது. எழுத்தாற்றல், சங்கீதம், நடனம், நடிப்பாற்றல், சிற்பம்,அலங்காரம், சித்திரம், போன்ற ஏதாவது துறைகளில் ஒன்றிலோ பலதிலோ திறமைகளை வளர்த்துக்கொண்டால் அது பலர் முன் உங்களை அடையாளப்படுத்தி பெருமை கொள்ள வைக்கும். நீங்கள் பெரும் தொழிலதிபராக இருக்க கூடும். நிதிபலம், ஆட்பலம் உடையவராக இருக்கலாம். அவற்றை எவரும் கணக்கெடுக்க மாட்டார். ஆனால் ஒருவனது கலை வெளிப்பாடு அவனை என்றும் முன்னிலைப்படுத்தும்.

மற்றவர்களுடன் தன்மையாக பேசி அவர்களை வசீகரிப்பது சிலருக்கு கைவந்த கலையாக இருக்கின்றது. உறவை பேணுவதற்கு அதுவும் ஒரு முக்கியமான தகமையாக உள்ளது.

அதே போன்று நாம் உலக விவகாரங்கள் சார்ந்த எமது அறிவை கட்டாயமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் கலந்துரையாடும் போது நாமும் அவற்றில் பங்கு பற்ற கூடியவர்களாக இருக்க வேண்டும். பெறுமதியான கருத்துக்களை முன்வைக்க கூடிய திறன் எமக்கு இருக்க வேண்டும்.

நாம் கலகலப்பாக தோற்றமளிப்பதற்கு அவசியம் என கருதப்படவேண்டியது எமது நல்ல ஆரோக்கியமாகும். எமது உணவு பழக்கம், உடற்பயிற்சி, நல்ல தூக்கம், ஓய்வு அனைத்திலுமே நாம் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.

நாம் பழகுபவர்கள் அனைவருமே குற்றம் குறைகள் அற்றர்களாக இருப்பர் என்பது சாத்தியமல்ல. நாம்தான் அனுசரித்து போக வேண்டும். அப்போதுதான் நாம் எப்போதும் எங்கும் கலகலப்பாக தோற்றமளிக்க முடியும்.! எம்மை நாம் எப்படி வைத்துக்கொண்டால் மற்றவர்களின் முன் கலகலப்பாக இருக்கமுடியும் என்பதை நாமும் புரிந்து கொண்டு மற்றவர்களையும் அவ்வழிக்கே அழைப்போமாக!

---

# இயற்கையை ரசிக்கவும் கூடாதா....

(தன்யா)




*திருகோணமலையில் மூதூரில் இளக்கந்தை பகுதியில் இடம்பெற்ற ஓர் மனதை உருக்கும் சம்பவம்........*

இலிங்கநகர் பிரதேசத்தில் வசித்து வரும் இருபது வயது நிரம்பிய தரன் மூதூரை பிறப்பிடமாகக் கொண்டவன். அவனுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மூதூர் சென்று வருவது வழக்கம். அன்றும் அவ்வாறே இளக்கந்தைப் பகுதியில் அவனது மாமாவின் வயலிற்குச் சென்றான். இவனைக் கண்டதும் மாமா தரனிடம் வேலையாட்களை மேற்பார்வை செய்யுமாறு கூறி இவனது பொறுப்பில் ஒப்படைத்து விட்டு அவர் வெளி வேலைக்குச் சென்றார். இவனும் அவர்களுக்கு வேலைகளை பணித்தவாறு வயல் வரம்புகளின் மீது நடந்து கொண்டிருந்தான்.

வரம்புகளின் மீது நடந்தவாறே வயலின் மறுபுறம் சென்றிருந்தான். இவன் தன்னை மறந்து வயல்வெளியை ரசித்தவாறு செல்வதை கண்ணுற்ற ஒருவன் இவனை பல தடவைகள் அழைத்து.. தம்பி அங்கே போக வேண்டாம், திரும்பி வந்து விடு என கத்தினான். ஆனால் அவன் கத்தியது தரனின் காதிற்கு எட்டவில்லை.

உடன் அந்த வேலையாள் ஓடிச்சென்று தங்கள் குலாமில் இருந்த சற்று வயது முதிர்ந்தவரிடம் விபரம் உரைத்தான். அவரும் எட்டிப் பார்த்து விட்டு அவர்களுள் சிறுவனான ஒருவனை ஓடிச்சென்று தரனை மறிக்குமாறு பணித்தார்.

அவ்வயலின் எல்லையானது ஒரு தரைப் பாதையோடு இணைகின்றது. பாதைக்கு மறு பக்கம் அடர்ந்த காடு. அந்தப்பக்கம் கூட பார்ப்பதற்கு கண்ணுக்குக் குளிர்ச்சியாக பச்சைப் பசேலென காட்சி அளித்தது. அதிலிருந்த மரங்களில் ஒரு பழுத்த இலையை காண முடியாது. அந்த அளவுக்கு குளிர்ச்சியாக தென்பட்டது.

தரன் தன் பயணத்தை தொடர்ந்து கொண்டே இருந்தான்.

இரைக்க இரைக்க தரன் அருகில் ஓடி வந்த அச்சிறுவன் தரனின் முன்னால் கையை போட்டு அண்ணா! அண்ணா! அந்தப் பக்கம் போகாதீர்கள். அங்க... அங்க... அவனுக்கு இப்போது தான் வியர்த்துக் கொட்டியது. பீதியால் அவன் கண்கள் சற்றே வெளியில் வந்தன.

தரனோ அதைப் புரிந்து கொள்ளாமல், டேய் உனக்கு வேலை தந்தனான் இல்லையா? இங்க என்ன செய்றாய்? கெதியாக வேலைக்கு போ.. [illegible] விரைந்து வேலையை முடி... மதிய உணவிற்கு முன் அந்த வேலையை முடித்து விட வேண்டும் சரியா? என கத்தினான்.

மன்னிச்சுக்கங்க அண்ணா! கந்தண்ணே தான் அனுப்பிச்சு, உங்கள அங்கனைக்கு போகாம தடுக்க சொல்லி... அண்ணா! அங்க போகாதீங்கண்ணா!

சரி சரி நீ போ நான் வந்துர்றன் என அனுப்பி வைத்தான் தரன். அவனோ மறுபக்கம் ஒருக்கால் பார்த்துவிட்டு பின்னங்கால் பிடரியில் முட்டும் அளவுக்கு ஓடிச் சென்றான்.

அச்சிறுவனின் பதட்டம், கண்களில் இருந்த பயம், மற்றும் அவனது உளறல்கள்.. மறு பக்கத்தில் ஏதோ நடந்திருப்பதை உணர்த்திற்று. இருப்பினும் பேய், பிசாசுகளின் மீது சற்றும் நம்பிக்கை அற்றவனான அவனுக்கோ மனம் அரித்தது. இன்று என்ன நடக்கின்றது என பார்த்து விடுவோம் என..

வயதும் இளம் வயதல்லவோ????

மேலும் "இரண்டடி எடுத்து வைத்தான். வயல் முடிவடைந்து புல்வெளி காணப்பட்டது. இரவு பெய்த மழையினால் நிலமெல்லாம் ஈரலிப்பாகவும் புட்களின் மீது நீர்த்துளிகளும் காணப்பட்டன. மேலும் இரண்டடி எடுத்து வைத்தான். பின்னால் ஒருவித வெக்கையை உணர்ந்தான். அவன் நின்று கொண்டிருந்த இடத்திற்கு பின்னால் பச்சைப்புல் எரிந்து கொண்டிருந்தது. பின்னால் பார்த்துவிட்டு திரும்ப முன்னால் இருந்த பெருத்த மரங்களின் இலைகள் சருகாகி கீழே பெருமளவில் விழுந்து கொண்டிருந்தன. என்ன அதிசயம் என பார்த்துக் கொண்டிருக்க வீழ்ந்த அவ்வளவு இலைகளும் சுழன்று எழும்பி சுழி போன்ற வடிவில் இவனை நோக்கி வந்தது. சுதாகரித்துக் கொண்ட அவன் சற்று விலகிக் கொண்டான். பின் இரத்தம் வடியும் கைகள் போன்ற ஏதோவொன்று இவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. வாயில் கந்த சஷ்டி கவசமும் கால், கை, தலை அனைத்தாலும் ஓடினான் தரன் அவ்விடத்தை விடுத்து..... பின்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### “தங்க மகன்”

தனுஷ், சமந்தா, எமிஜாக்சன் நடிக்கும்

வேல்ராஜ் இயக்கத்தில்

தனுஷ் அப்பா அலுவலகத்திலேயே வேலைக்குச் சேர்கிறார். சமந்தாவை திருமணம் செய்கிறார். சந்தோஷமாக வாழ்க்கை நகரும் தருணத்தில், ஆபீஸ் டார்ச்சரால் அப்பா கேஎஸ் ரவிக்குமார் தற்கொலை செய்து கொள்கிறார். தனுஷ்க்கும் வேலை போகிறது. குடும்பம் நிலை குலைந்து போகிறது. வேலையில்லா பட்டதாரியாகிவிடும் தனுஷ், மீண்டும் எப்படி தன் குடும்பத்தை தூக்கி நிறுத்தினார், அப்பாவின் தற்கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்தார் என்பதெல்லாம் வழக்கம் போல வெள்ளித்திரையில் பார்த்துக் கொள்ளுங்கள். திருவிளையாடல் ஆரம்பம், படிக்காதவன், பொல்லாதவன், விஐபி, இப்போது தங்கமகன்... எல்லா படங்களிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி கதையமைப்புதான். அதனால்தானோ என்னமோ நிறைய காட்சிகளை ஏற்கெனவே பார்த்த உணர்வு. முதல் பாதி இளமைக் கொப்பளிக்கிறது. தனுஷ் - எமி ஜாக்ஸன் காட்சிகள் துள்ளுவதோ இளமை ரேஞ்சுக்குப் போகிறது சில இடங்களில். தனுஷ ஆர்ப்பாட்டமின்றி நடித்திருப்பது நன்றாக இருந்தாலும், சின்ன வயசுப் பையனாத அவரைக்



காட்டுமிடங்களில் ரொம்பவே உறுத்தல். செண்டிமெண்ட் என்று நினைத்துவிட்டாரோ என்னமோ... அவரது முந்தைய படங்களில் வந்த குடி, நம்ப முடியாத திருப்பங்கள் சில இதிலும் உண்டு. சமந்தா, எமி ஜாக்ஸன் இருவரும் நாயகிகள். சமந்தா முகத்தை க்ளோஸப்பில் பார்க்க மெய்யாலுமே கஷடமாகத்தான் உள்ளது. ஒரு காட்சியில் எமியின் தோற்றம் முகம் சுளிக்க வைக்கிறது. சதீஷ்ன் காமெடி பரவாயில்லை. அதை ரசிக்கக் காரணம் ஷார்ப்பான வசனங்கள். ஞாபக மறதித் தந்தையாக வரும் கேஎஸ் ரவிக்குமார் புதிய இன்னிங்ஸைத் தொடங்கியிருக்கிறார். ராதிகா ஓகே. வேலையில்லா பட்டதாரியில் வந்த வில்லனே தேவலாம் எனும் அளவுக்கு ஒரு சப்பையான வில்லன். கொடுத்த வேலையைச் செய்திருக்கிறார் ஜெயப்பிரகாஷ். குமரனின் ஒளிப்பதிவு அருமை. வழக்கம்போல இரைச்சலை வாரி இறைத்திருக்கிறார் அனிருத் பின்னணி இசை என்ற பெயரில். ஜோடி நிலாவே... பாடல் கேட்கலாம் ரகம்

## 2016ல் 6 படங்கள் விஜய் சேதுபதி

சீனு ராமசாமி இயக்கத்தில் இடம் பொருள் ஏவல், ரஞ்சித் ஜெயக்கொடி இயக்கத்தில் மெல்லிசை, கார்த்திக் சுப்புராஜின் இயக்கத்தில் இறைவி மற்றும் நலன் குமாரசாமியின் காதலும் கடந்து போகும் ஆகிய படங்கள் முழுமையாக முடிந்து வெளியீட்டிற்குத் தயாராக உள்ளன. மேலும் அருண்குமாரின் இயக்கத்தில் உருவான சேதுபதி திரைப்படமும் இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கிறது. இதைத் தவிர சீனு ராமசாமியின் இயக்கத்தில் தற்போது விஜய் சேதுபதி நடித்து வரும் தர்மதுரையும் அடுத்த ஆண்டில் திரைக்கு வந்து விடும். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது அடுத்த ஆண்டு முழுவதும் விஜய் சேதுபதியின் ஆண்டாகவே இருக்கும் என்று தெரிகிறது. இதைத் தவிர வா டீல் இயக்குனர் சிவஞானத்தின் புதிய படம் ஒன்றிலும் விஜய் சேதுபதி நடிக்கவிருக்கிறார். இதைத்தவிர மேலும் புதிய படங்களில் விஜய் சேதுபதி நடித்து அந்தப் படமும் வெளியாகும் வாய்ப்புகள் இருப்பதால் அடுத்த ஆண்டு விஜய் சேதுபதிக்கு அதிர்'டமான ஆண்டாக அமையும் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக இருக்கிறது.

## அதிக படங்களில் நடிக்கும் 6 கதாநாயகிகள்

தமிழில் இந்த வருடம் 204 படங்கள் வெளி வந்துள்ளன. இதன் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட புதுமுக கதாநாயகிகள் அறிமுகமாகி இருக்கின்றனர். ஆனால் இவர்கள் ஓரிரு படங்களிலேயே ஓரங்கட்டப்பட்டு விட்டார்கள். சிறுபட் ஜெட் படங்கள் ஓடாமல் நஷ்டம் அடைந்ததால் இந்த நடிகைகள் செல்வாக்கு இழந்து போனார்கள்.

இவர்கள் மத்தியில் நயன்தாரா, திரிஷா, ஹன்சிகா, சமந்தா, சுருதிஹாசன், எமிஜாக்சன் ஆகிய 6 பேர் மட்டும் முன்னணி கதாநாயகிகளாக வலம் வருகிறார்கள். பெரிய கதாநாயகர்கள் இந்த நடிகைகளுடன் ஜோடி சேரவே ஆர்வம் காட்டுகிறார்கள். 'ரூ.30 கோடி, 'ரூ.50 கோடி என பெரிய பட்ஜெட்டில் தயாராகும் படங்களுக்கு இவர்களே கதாநாயகிகளாக ஒப்பந்தம் செய்யப்படுகின்றனர்.



அடுத்த வார இயத்தில்

பசங்க

நடிகர்கள்: சூர்யா, அமலா பால், பிந்து மாதவி, கார்த்திக் குமார், வித்யா பிரதீப், நிஷேஷ், பேபி வைஷ்ணவி, முனீஸ்காந்த்



## நாகேஷ் பட டைட்டிலில் சந்தானம்



மறைந்த காமெடி நடிகர் நாகேீன் பிரபல படத்தின் தலைப்பை வைத்து இப்போது ஒரு புதிய படத்தில் நடிக்கவுள்ளார் சந்தானம்.இந்த படத்தில் சந்தானம் சமையல்காரனாக நடிப்பதால் “சர்வர் சுந்தரம்“ என்ற பெயர் பொருத்தமாக இருக்கும் என கருதி, யுஏஆ ˚சழனரஉவமைெ லிருந்து அதை வாங்கியுள்ளனர்,ஆனந்த் பால்கி என்ற புதுமுக இயக்குனர் இந்த படத்தை இயக்கவுள்ளார். படப்பிடிப்பு வரும் பொங்கல் முதல் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 18 ஆண்டுகளுக்கு பிறகு மறு பிறவி எடுக்கும் மருதநாயகம்



1997-ம் ஆண்டு மருதநாயகம் படத்தை கமல் தொடங்கினார். இங்கிலாந்து ராணி எலிசபெத் இந்த தொடக்க விழாவில் கலந்து கொண்டார். கமலே கதை, திரைக்கதை எழுதி இயக்கி நடித்தார். பின்னர் நிதி பற்றாக்குறை காரணமாக அந்த படம் கைவிடப்பட்டது.

யாராவது தயாரிக்க முன் வந்தால் மருதநாயகம் மீண்டும் தொடங்கப்படும் என்று கமல் கூறி இருந்தார். சில தினங்களுக்கு முன்பு அவர் அளித்த பேட்டியில், லண்டனில் உள்ள தனது நண்பர் இந்த படத்தை தயாரிக்க முன் வந்து இருப்பதாக தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் திரைப்பட தயாரிப்பு நிறுவனமான அய்ங்கரனின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் மருதநாயகம் படத்தின் போஸ்டர் வெளியிடப்பட்டு இருக்கிறது. இதையடுத்து கமலின் மருதநாயகம் மறு பிறவி எடுப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. ரஜினியின் எந்திரன்-2 படத்தை மெகா பட்ஜெட்டில் லைகா நிறுவனம் தயாரிக்க இருக்கிறது. இந்த படத்தின் வேலைகள் தொடங்கிய பிறகு மருதநாயகம் படத்தையும் நிறுவனம் தயாரிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY


OTHER


MOBILE

## ஆயுளை அதிகரிக்கும் ஜீன்கள் கண்டுபிடிப்பு

மனிதனின் ஆயுட்காலத்தை 100 வருடங்களை தாண்டியும் அதிகரிக்கக்கூடியது என நம்பப்படும் 4 வகையான ஜீன்களை (பரம்பரை அலகுகள்) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தற்போது அதிகளவானவர்கள் 90 வயதினை அண்மித்த காலப்பகுதியிலேயே மரணமடைகின்றனர். எனவே இந்த ஜீன்களின் உதவியுடன் 100 வருடங்களை தாண்டியும் வாழ வைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இரத்தத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ABO எனும் ஜீன், கலங்களின் செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தும் CDKN2B எனும் ஜீன், பழ ஈய்க்களில் காணப்படும் SH2B3 வகை ஜீன் மற்றும் நிர்ப்பீடணத்துடன் தொடர்புடைய HLA எனும் ஜீன் ஆகியவற்றினை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் மாற்றத்தின் ஊடாகவே இவ் ஆயுள் அதிகரிப்பு சாத்தியமாகும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.





## குறைந்த விலையில் விண்டோஸ் டேப்லட்

சீனாவைச் சேர்ந்த வன்பொருள் உற்பத்தி நிறுவனமான Chuwi தனது டேப்லட் ஒன்றினை அறிமுகம் செய்கின்றது. Chuwi Vi8 Plus எனும் இந்த டேப்லட் ஆனது விண்டோஸ் இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக இருப்பதுடன் 8 அங்குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய IPS தொழில்நுட்பத்தினைக் கொண்ட தொடுதிரையினைக் கொண்டுள்ளது. ,வை தவிர Intel Atom x5-Z8300 Quad-Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM> 32GB சேமிப்பு நினைவகம், 4>000 mAh மின்கலம் என்பவற்றினையும் கொண்டுள்ளது. மேலும் 100 டொலர்களே பெறுமதியான இந்த டேப்லட்டில் தலா 2 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெராவும் தரப்பட்டுள்ளது.

## உலகின் முதலாவது இணையத்தளத்திற்கு வயது 25

இன்று உலகே சுருங்கி ஒரு கிராமம் போல தோற்றமளிப்பதற்கு இணையத்தளம் முக்கிய காரணமாக விளங்குகின்றது.

இவ்வாறான இணையத்தளத்தினை முதன் முதலில் ரிம் பேர்னர்ஸ் லீ (Tim Berners-Lee) என்பவர் அறிமுகம் செய்திருந்தார்.

அதாவது சுவிட்சர்லாந்தில் உள்ள CERN எனும் ஆய்வு மையத்தில் பணிபுரிந்த இவர் 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முதன் முதலாக World Wide Web (WWW) எனும் நெறிமுறையை அறிமுகம் செய்து தற்போதைய இணையத்தளங்களுக்கு அடித்தளமிட்டிருந்தார்.

இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது உலகெங்கிலும் சுமார் 4 பில்லியன் வரையான இணையத்தளங்கள் அல்லது இணைய பக்கங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயனர்களுக்கு மைக்ரோசொப்ட் விடுக்கும் அவசர எச்சரிக்கை

கூகுள், பேஸ்புக், யாகூ போன்ற நிறுவனங்கள் தமது பயனர்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு எச்சரிக்கைகள் செய்வது வழக்கம். இவற்றின் வரிசையில் மைக்ரோசொப்ட் நிறுவனமும் தற்போது இணைந்துள்ளது. அதாவது ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் தற்போது இணையத்தளங்கள் மூலமாக பல்வேறு கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. இதனால் பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் அனுமதியின்றி கையாளப்படுவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதனை தவிர்த்து சிறந்த சேவையை வழங்குதற்காக ஏனைய நிறுவனங்களைப் போன்றே மைக்ரோசொப்ட் நிறுவனமும் தனது பயனர்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை செய்துள்ளது

## ஐஸ் கட்டிகளை தானாகவே உருக்கும் வீதி

குளிர் பிரதேசங்களில் உள்ள வீதிகளில் படியும் ஐஸ் கட்டிகளினால் அதிகளவு வீதி விபத்துக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றது. இதற்கு ஒரு தீர்வாக தானாகவே ஐஸ் கட்டிகளை உருகச் செய்யும் வீதிகளை அமைப்பதற்குரிய தொழில்நுட்பம் ஒன்றினை துருக்கியிலுள்ள முழலி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். இதற்காக விசேட பதார்த்தம் (Material) ஒன்றினை Styrene-Butadiene-Styrene எனும் பொலிமர் மற்றும் தார் என்பவற்றின் கலவையாக தயாரித்துள்ளனர். இக் கலவை ஐஸ் கட்டிகளை கரைக்கும் உப்பு தன்மையான பதார்த்தம் ஒன்றினை வெளிவிடுவதாகவும், வாகனங்கள் செல்லும்போது நிலத்தின் கீழாக அமுக்கம் ஏற்படுவதனால் இப் பதார்த்தம் பரந்து வீதியின் மேற்பரப்பிலுள்ள ஐஸ் கட்டிகளை உருக வைப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இப்புதிய பதார்த்தம் பல வருடங்களுக்கு பழுதுபடாமல் இருப்பதனால் குறுகிய காலத்தில் மீண்டும் வீதிகளை செப்பனிடவேண்டிய அவசியம் இல்லை என மேலும் குறிப்பிட்டுள்ளனர்.




## வானிலை அறிக்கை! அழகாக வாசிக்கும் பெண் ரோபோ

சீனாவில் பிரபல தொலைக்காட்சி சேனலில் பெண் ரோபோ ஒன்று நிகழ்ச்சி தொகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பிரபலமான டிவி சேனல்களில் ஒன்று Shanghai Dragon TV. இந்த சேனலில் முதன்முறையாக செயற்கை அறிவு கொண்ட பெண் ரோபோ ஒன்று நிகழ்ச்சி தொகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த ரோபோவானது, Xiaolce என்னும் Smart Cloud மற்றும் Big Data Software-ia கொண்டு இயங்குகிறது. அழகான பெண் குரலில் வானிலை அறிவிப்புகளை மனிதர்களை போலவே துல்லியமாக ஏற்ற இறக்கத்துடன் வாசிக்கிறது. இது பெரும்பாலான நேயர்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது மட்டுமின்றி அவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது.



## சூரியப் படலங்களுக்கான புதிய கண்ணாடிப்பூச்சு கண்டுபிடிப்பு

சுவட்டு எரிபொருட்கள் தொடக்கம், அணு செறிவாக்கல் முறை வரை பல்வேறு முறைகள் மின்சக்தி உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் அண்மைக்காலமாக சூரிய படலம் மூலமான மின் உற்பத்தியே பல நாடுகளில் பரிந்துரைக்கப்பட்டு வருவதுடன், நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. இதனால் சூரிய படல மின்சக்தி உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகளும் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன. இதன் ஒரு அங்கமாக தற்போது எந்தவொரு கோணத்திலிருந்தும் சூரிய ஒளியை பெற்றுக்கொள்ளக்கூடிய விசேட கண்ணாடிப்பூச்சு ஒன்றினை சவுதி அரேபியாவிலுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அப்துல்லா பல்கலைக்கழக (முயுருளுவு) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மேலும் இவை தூசு படிவதிலிருந்து சுயமான பாதுகாப்பினைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயானது ஓர் குழந்தை

சிறுகதை

வழக்கம் போல் இரவு 10 மணிக்கு கணினி முன் அமர்ந்தான் ரவி. சூடாக பாலை கொண்டு வந்து கொடுத்தாள் அவன் அம்மா. திருமணமே வேண்டாம் என்று ஒற்றைக்காலில் நிற்கும் மகனைப்பார்த்து ஒரு பெருமூச்சு விட்டு நகர்ந்த போது, அம்மா இங்கே வாயேன் என்று கையைப் பிடித்து இழுத்தான் ரவி.
என்னடா?
நெட்டில் இந்தப் படத்தைப் பாரேன், என்று காண்பித்தான். அது ஒரு அழகான பெண்ணின் படம். மணமகன் தேவை அட்டவணையில் இடம் பெற்றிருந்தது.
வயது 24. கணவனை இழந்தவள். ஒரு வயதில் அழகான ஒரு பெண் குழந்தை உள்ளது. குழந்தையைப் பெண்ணின் பெற்றோர் வளர்த்து கொள்வர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
அதைப் பார்த்து விட்டு மகனின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் ஒரு வகையான புன்னகை கலந்த திருப்தி காணப்பட்டது.
ரவி உனக்குப் பிடித்திருக்கிறதா? என்றாள்.
ம் பார்க்கலாம் என்றான்.
ரவியின் அம்மாவுக்கோ ஒரே சந்தோஷம்.
இரு அப்பாவையும் கூப்பிடலாம் என்றாள்.
எத்தனையோ பெண்களின் படத்தைப் பார்த்து முகம் சுளித்த ரவி, திருமணம் ஆகி ஆறே மாதத்தில் மண முறிவு ஏற்பட்டு நீதி மன்றம் மூலம் விவாகரத்து பெற்றவன். தன் மீது தவறான புகார்களைக் கூறி அவதூறாகப் பேசி அவன் மனதை நோகடித்தவள் கலா. அதனால் ஏற்பட்ட மன விரக்தியில் இருந்தான் ரவி.
பெற்றோர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் மறுமணத்திற்கு சம்மதிக்கவில்லை ரவி. அதே சமயம் அவனின் ஒரே அக்கா, அமெரிக்கா-விலிருந்து கடந்த மாதம் வந்திருந்த போது, அவனிடம் பேசி சம்மதிக்க வைத்திருந்தாள். அதன் பலன்தான் கணினியில் மணமகள் தேவை விளம்பரங்களைப் பார்க்கச் செய்தது அவனை.
அவன் அம்மா லீலாவதி அவன் அப்பாவையும் அழைத்து வந்து காண்பித்தார். இருவருக்குமே திருப்தி ஏற்பட்டது. முகவரியைக் குறித்துக் கொண்டு பெண் வீட்டாருடன் தொடர்பு கொண்டார்கள். பெண்ணின் பெயர் ஷாந்தினி. அழகான பெயர். அவளும் திருமணமாகி ஆறே மாதத்தில் விபத்து ஒன்றில் தனது அன்பான கணவனைப் பறிகொடுத்தவள். வயிற்றில் வளர்ந்த குழந்தையைப் பெற்றெடுத்து. தகப்பன் முகத்தைக்கூட பார்க்காத தன் அழகான மகளைப் பார்த்து பார்த்து அழுது தீர்த்தாள். ஷாந்தினி பெற்றோருக்கு ஒரே மகள். சகல வசதிகளும் உள்ளது. அம்மா டீச்சர், அப்பா வங்கியில் ஆபீசர். மகளின் பரிதாப நிலையைக் கண்ட அவள் அம்மா ஜெயா தன் பணிக்கு விருப்ப ஓய்வு பெற்று மகளின் மகளைத் தன் மகளாகவே பாவித்து நேசித்து வளர்த்தாள். ஜெயந்தினி என்று தன் பேத்திக்குப் பெயர் வைத்தாள். தன்னை அம்மா என்றும் தன் கணவரை அப்பா என்றும் பேத்தியை அழைக்கச் செய்திருந்தாள். மகளிடம் அதிகம் ஒட்ட விடாமல் பேத்தியைப் பார்த்துக் கொண்டார். அதற்குக் காரணம் மகளுக்கு மீண்டும் ஒரு மண வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற அவளது ஆசைதான். ஆரம்பத்திலிருந்தே அந்த நோக்கத்திலேயே செயல்பட்டாள். தாயின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாத ஷாந்தினி பலமுறை அவளிடம் கோபப்பட்டது உண்டு.
அம்மா. நீங்கள் செய்வது சரியல்ல. என் மகளை என்னிடமிருந்து பிரித்துவிட்டீர்கள். அவள் என்னுடன் படுப்பதே இல்லை. உங்களுடன்தான் படுக்கிறாள். நீங்கள் ஊட்டினால் தான் சாப்பிடுகிறாள்" என்பாள்.
அம்மா எதையுமே காதில் வாங்குவதில்லை. குடும்ப நண்பரான மனநல மருத்துவர் மூலம் கவுன்சலிங் கொடுத்து படாதபாடுபட்டு ஷாந்தினியை மறுமணத்-திற்கு சம்மதிக்க வைத்திருந்தனர் அவளது பெற்றோர்.
ஷாந்தினியின் நிலையை அறிந்து ரவியின் பெற்றோர் தங்கள் மகனின் நிலையையும் எடுத்துக் கூறினர். ரவி ஒரு கணிணி பொறியாளர். அவனிடம் எந்த குற்றமும் கிடையாது. நீங்கள் அக்கம் பக்கம் வீட்டாருடன் விசாரித்துக் கொள்ளலாம். நீங்கள் விரும்பினால் என் மகன் உங்கள் மகளுக்கு மறு வாழ்வு கொடுப்பான் என்று தங்கள் விருப்பத்தை தெரிவித்தார் ரவியின் தந்தை.
இரு வீட்டாரும் சம்மதிக்கவே திருமணத்திற்கு நாளும் குறித்தாகி விட்டது. ஷாந்தினியின் மனநிலையை மாற்றவே அவளை ஒரு மெட்ரிக் பள்ளிக்கு கணிணி ஆசிரியையாக பணியாற்ற அனுப்பி இருந்தார் அவள் தந்தை.
திருமண நாள் குறித்த பின் அவளுக்கு ஒரே மனப் போராட்டமாகவே இருந்தது. அவள் மனம் எதிலும் ஈடுபடவே இல்லை. வேலையையும் விட்டு விட செய்தார்கள் அவள் பெற்றோர். அம்மா ஜெயந்தினியைப் பார்க்காமல் என்னால் வாழவே முடியாது என்று கண்ணீர் விட்டாள். தாய் அவளை தேற்றினாள். தன் மகளை விட்டு பிரிந்து தனக்கு ஒரு வாழ்க்கை தேவையா என்று சிந்தித்தாள். அம்மா வேண்டாம்மா இந்த கல்யாணம். நான் காலம் முழுவதும் உங்களுடனே இருந்து விடுகிறேன் என்றாள். நான் இருப்பது உங்களுக்குப் பாரமாக இருந்தால் தனியாக என் மகளுடன் வாழ்ந்து கொள்கிறேன் என்றாள்.
மகள் ஜெயந்தினிக்கோ அம்மா தேவையே இல்லை. பாட்டி தாத்தா இருந்தால் போதும். அவர்களைத்தான் அம்மா அப்பாவாக நினைத்து ஒட்டிக் கொண்டாள். பாட்டியும் அப்படித்தான் அவளை, தாயைப் போல் பாசத்தை ஊட்டி வளர்த்திருந்தாள்.
திருமண நாளும் வந்தது. ரவி- ஷாந்தினி திருமணமும் முடிந்து இருவரும் பெங்களூருக்குக் கிளம்ப வேண்டியிருந்தது. ரவி குழந்தையை தூக்கிக் கொஞ்சினான். விளையாடினான். குழந்தையை மணமகளின் பெற்றோர் வளர்த்துக் கொள்வர் என்று அறிவித்து விட்டதால் ரவியிடம் மீண்டும் குழந்தையை வளர்ப்பது பற்றி பேச்செடுக்கத் தயங்கினாள். ரவியும் குழந்தை-யைப் பற்றி எதுவுமே கேட்க வில்லை. தாய் லீலாவதியோ பேத்தியிடம், சாந்திமா ஊருக்குப் போகப் போகிறாள். நீ டாடா கூறுவாயாம் என்று கூறி அவளையும் பக்குவப்படுத்திவிட்டாள்.
ரவி, ஷாந்தினியும் ரவியின் பெற்றோருடன் காரில் கிளம்பத் தயாராயினர். ரவி, மனைவி ஷாந்தினியின் முகத்தைப் பார்த்தான். வாட்டமுடன் காணப்பட்டாள். ரவியின் மனதிற்கும் மிகவும் கஷ்டமாக இருந்தது. இந்தக் குழந்தை என்ன பாவம் செய்தது தன் தகப்பன் முகத்தைக்கூட பார்க்க-வில்லை. தாயையும் விட்டுப் பிரிய வேண்டுமா என்று தோன்றியது.
குழந்தை ஜெயந்தினியோ ' எதையுமே அறியாமல் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது.
ஷாந்தினி கிளம்புவதைக் கவனித்த குழந்தை, திடீரென்று ஓடி போய் கைப் பையை எடுத்து வந்து சாந்திமா இந்தா உன் ஹாண்ட் பேகை மறந்துட்டியே என்று அவளிடம் கொடுத்தது. அவள் பள்ளிக்குப் போகும்போது ஹேண்ட் பேகை மறந்துவிட்டுச் செல்லும் அம்மாவுக்கு அதைக் கொண்டுவந்து கொடுக்கிற வழக்கம்.
ரவியும் ஷாந்தினியும் சேர்ந்து பேக்கை கொடுத்த குழந்தையை வாரி எடுத்தனர். ஷாந்தினி, ஜெயந்தினியை கன்னத்தில் முத்தமிட்டு இறுக அணைத்தாள். ஆனால், குழந்தையோ திமிறிக் கொண்டு கீழே இறங்கி, பாட்டியை நோக்கி "அம்மா" என்று ஓடியது. அவள் கால்களை கட்டிக் கொண்டு பின்புறம் ஒளிந்து கொண்டு தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்து, சாந்திமா டாடா என்றது மழலை மொழியில்.
தன் தாயை புகுந்த வீட்டிற்கு வாழ்த்தி அனுப்பிவிட்டு சிரித்து நின்றது அந்தக் குழந்தை, தாயாகி.

---

சாதாரமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

## ஒரு பாலமும் பால்யத்து திருவிளையாடல்களும்

மட்டக்களப்பில் பழைய கல்லடிப்பாலத்திற்கு அருகில் புதிய கல்லடிப்பாலத்தைக் கட்டி பாவனைக்கு விடப்பட்டிருந்தது.
1980களின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வி கற்ற காலமது, விடுதியில் தங்கியிருந்தேன். விடுதியின் தலைமை மாணவர் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தேன்.
விடுதி வாழ்க்கை என்பது இலகுவல்ல. சிறிய வகுப்பு மாணவர்களுக்கு அது மிகவும் கடுமையானது. அன்பு ஆதரவு இல்லாத இடம். பசியும் தன் பங்கிற்கு வீடு பற்றிய ஏக்கத்ததை தரும். எனவே சிலர் வீடுகளுக்கு தப்பி ஓடுவதுண்டு.
சில மாணவர்கள் கல்லடிப் பாலத்தைக் கடந்தே இவர்களின் வீடுகளுக்குச் செல்லவேண்டும். அப்படி விடுதியில் இருந்து வீடுகளுக்குத் தப்பியோடும் மாணவர்களை நாம் மடக்கிப்பிடிக்கும் இடம் கல்லடிப்பாலம்தான்.
ஒரு முறை ஒரு பொடிப்பயல் விடுதியில் இருந்து தப்பிவிட்டான் என்பதை உளவுத்துறை செய்தியறி-வித்தது. பேரூந்து நிலையத்திற்கு ஒரு காவல் படை, தனியார் பேரூந்து நிலையத்துக்கு ஒருபடை, நான் தனியே பாலத்துக்கு என்று சென்றோம்.
தொலைத்தொடர்பு சாதனங்கள் இல்லாத காலம். நான் பாலத்தின் பாதசாரிகள் நடக்கத் தொடங்கும் ஆரம்பத்தில் நின்றிருந்தேன்.
வெய்யிலின் அகோரம், அத்துடன் இந்தப் பொடிப்பயல் தப்பிய கதை அதிபருக்குத் தெரிந்தால் எனக்குக் கிடைக்கவிருக்கும் பூசை என்று எல்லாம் சேர்ந்து பொடிப்பயலின்மேல் எனக்கு கெட்டகோபம் வந்திருந்தது.
சற்று நேரமாய் பாலத்தின் வாயிலில் நின்றிருந்தேன். அவனைக் காணவில்லை. நான் பாலத்தைக் கடந்துகொண்டிருந்த வெள்ளைச்சீருடை அழகிகளைப் பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் அவன் என்னைக் கடந்து பாதசாரிகள் நடக்கும் பகுதியினுள் நடப்பதை சற்று நேரத்தின் பின்பு தான் கண்டேன்.
நான் கடுங் கோவத்துடன் அவனின் பெயரைக் கூறிக் கத்தினேன்: கத்தியது மட்டுமல்லாது அவனைத் துரத்தவும் தொடங்கினேன். எனது குரலையும், என்னையும் கண்டவன் ஓடத் தொடங்கினான். இருவரும் ஓடிக்கொண்டிருந்தோம். நான் அவனை நெருங்கிக்கொண்டிருந்தேன். திரும்பிப் பார்த்தபடியே ஓடியவன், தப்ப முடியாது என்று அறிந்துகொண்டான். ஓடுவதையும் நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தபடியே நின்றான். அவன் ஓடியதை நிறுத்தியதும் நானும் மூச்சுவாங்கியபடியே ஓடியதை நிறுத்தி அவனை நோக்கி ஆறுதலாக நடக்கலானேன்.
சட்டென்று பாதசாரிகள் நடக்கும் பகுதியில் இருந்து வாகனங்கள் செல்லும் பகுதிக்கு பாலத்தின் மேல் ஏறி அங்கிருந்த இரும்புத் தூண்களை பற்றி பற்றி நகரத் தொடங்கினான்.
அவனின் இந்த திடீர் தந்திரோபாயத்தினால் நான் தடுமாறியதல்லாமல் பயந்தும் போனேன். அவனோ ஒரு சிறுபையன். பாலத்தின் நடுவே உள்ள கம்பிகளிலான இடைவெளியை அவன் கடந்துசென்றால் வாகனங்கள் செல்லும் பகுதி. அதைக் கடக்கும்போது இவன் வாவியினுள் விழுந்து விடுவானெனின், வாவியின் பெரும் ஆழமான பகுதியில் விழுந்துவிடுவான். இவ்வாறு நான் பயந்திருந்த போது ஒரு குரங்கினைப் போன்ற லாகத்துடன் பாலத்தின் நடுப்பகுதியை கடந்து கொண்டான் அவன்.
இப்போ எம்மால் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள முடிகிறது. ஆனால் அவனை என்னால் பிடிக்க முடியாதிருக்கிறது. நான் ஒரு பக்கம் ஓடினால் அவன் மறுபக்கமாய் ஓடினான். அவன் பக்கமாய் ஓடினால் மறுபக்கமாய் ஓடினான்.
சரி இவனை அவன் ஊர் பக்கமாக விட்டால்தானே பிரச்சனை என்பதால் அவன் ஊர்ப்பக்கமாய் ஓடத்தொடங்கினேன். அப்போ அவன் என்னை சற்றுத் தூரம் ஓடவிட்டவன் மீண்டும் பாலத்தால் நடைபாதைப் பகுதிக்கு பாலத்தினை கடந்து வந்தான். என்னைப் பார்த்தபடியே நின்றிருந்தான்.



எனவே நானும் பாலத்தின் மறுகரையின் எல்லையிலேயே நின்றுகொண்டேன். இப்போ அவனால் எப்பகுதியாலும் என்னைக் கடக்கமுடியாது. ஒரு மணிநேரம் கடந்திருக்கும் அவன் பாலத்தின் நடுவில் நின்றுகொண்டிருக்க நான் பாலத்தின் எதிர்க்கரையில் நின்றிருந்தேன்.
எனது அதிஸ்டத்துக்கு என்னைத் தேடி பேரூந்து நிலையத்திற்கு சென்ற மாணவர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் பொடிப்பயல் மீண்டும் பாலத்தில் ஏறி வாகனங்கள் கடக்கும் பகுதிக்குள் பாய்ந்து கொண்டான்.
நாம் இரு குழுக்களாகப் பிரிந்து இரு பகுதிகளினாலும் சென்றபோது அவன் தனது திருவிளையாடல் முடிவடையும் நேரம் வந்துவிட்டதையுணர்ந்து அழத்தொடங்கினான்.
அவன் அழ அழ வீதியால் அவனை இழுத்துவந்து, அவனை பாடசாலை விடுதிக்குள் அழைத்து வந்ததும் எனது கோபம் அனைத்தையும் சேர்த்து அவனின் முகத்தில் அறைந்தேன். அவனை சில மாணவர்கள் பொறுப்பெடுத்துக்கொண்டார்கள்.
அன்று மாலையே விசாரணைக் கமிஷன் ஆரம்பித்தது. அதிபரின் தலைமையில். நான் வெற்றிபெற்ற போர்வீரனைப்போல் நெஞ்சை நிமிர்த்தி நின்றிருந்தேன். அவன் கூனிக்குறுகி நின்றிருந்தான்
விசாரணையின் பின் அவனுக்கும் பேச அனுமதி கிடைத்தது. பசியினாலும், அம்மாவை பார்க்கவேண்டும் என்பதாலும் தான் ஓடியதாகச் சொன்னான்.
அத்துடன் சஞ்சயன் அண்ணண், நான் அறைந்ததையும் சொன்னான்.
அதிபர் அவனை கடுமையாக எச்சரித்து முகத்தில் இரண்டு அறைவிட்டு அவனை அனுப்பினார்.
பின்பு எனக்கு இரண்டு அறைவிட்டார். பின்பு இப்படிக் கூறினார்.
உனக்கு மாணவர்களை அடிப்பதற்கு உரிமையில்லை. உன்னைப் பார்த்து மற்றவர்களும் பழகுவார்கள்.
அவன் பாலத்தை குறுக்காகக் கடந்த போது நீ அவனை துரத்துவதை நிறுத்தியிருக்கவேண்டும். அவனுக்கு ஏதும் ஆபத்து நடந்திருந்தால் யார் பொறுப்பு என்பதாயும் இருந்தது அதிபரின் வாதம்.
பொடிப்பயலை எதிர்வரும் வாரவிடுமுறைக்கு வீட்டுக்கு அனுப்பவும் உத்தரவிட்டார். மனதுக்குள் பொடிப்பயலைக் கறுவியபடியே, பெரியவருக்கு தலையாட்டியபடியே வெளியேறினேன்.
அடுத்து வந்த வாரவிடுமுறையில் அவன் வீடு சென்றபோது என்னைப்பார்த்து சிரித்தது, என்னை கிண்டல் பண்ணுவது போலிருந்தது.
பிற்குறிப்பு :
சஞ்சயன் அண்ணனுக்கு விடுதியிலும், பாடசாலையிலும் பலத்த செல்வாக்கு இருந்தது. அதனால் ஒரு ஆயுதமற்ற விசுவாசிகளின் குழுவும் இருந்தது. அந்த விசுவாசிகளைக் கொண்டு அந்தப் பயலை அவன் விடுமுறையால் வந்தபின் நான் சில நாட்கள் கவனித்துக்கொண்டேன்.
விசுவாசத்தைக் காட்டிய விசுவாசிகளுக்கு பாடசாலைக்கு அருகில் இருந்த வீட்டுக்கோழிகள் விருந்தாகின.
30 ஆண்டுகளின் பின்பான ஒரு நாள் அதிபரைச் சந்தித்து பேசிக்கொண்டிருந்த போது இது பற்றிக் கூறிய போது, நீ இவ்வளவு மோசமான ஆள் என்று எனக்குத் தெரியாதே என்று கூறிச் சிரித்தார்.
உங்களுக்குத் தெரியாதது எவ்வளவோ இருக்கு சேர், என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பேரவை எதனுடைய தொடக்கம்???

நிலாந்தன்
www.globaltamilnews.net

சம்மந்தரின் தெரிவே விக்கினேஸ்வரன். தனது தெரிவே தனக்கு எதிராகத் திரும்புவது என்பது ஒரு தலைமைத்துவத்தின் தோல்விதான். என்பதால்தான் விக்கினேஸ்வரன் கட்சிக்கு வெளியே சென்று கருத்துக்கள் கூறியபோதெல்லாம் சம்பந்தர் பேசாமல் இருந்துவந்தார்.

சுமந்திரனும் விக்கினேஸ்வரனும் பகிரங்கமாக மோதியபோதும் சம்மந்தர் பேசாமல் இருந்தார். விக்கினேஸ்வரனை வெளிப்படையாக எதிர்ப்பதை அவர் ஓரளவுக்குத் தவிர்த்து வந்தார். எனினும் கடந்த மாதம் அவர் மட்டக்களப்பில் வைத்து தனது மௌனத்தை கலைத்தார்.

விக்கினேஸ்வரன் விரும்பினால் தலைமைப் பொறுப்பை ஏற்கலாம் என்ற தொனிபட அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். அதன் . மூலம் தலைமைப் பொறுப்பை இறுகப் பற்றிக் கொண்டிருக்கும் நோக்கம் தனக்குக் கிடையாது என்ற ஒரு தோற்றத்தை உருவாக்க முற்பட்ட அதேசமயம் விக்கினேஸ்வரன் விரும்பினால் அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம் என்ற ஒரு செய்தியையும் சம்பந்தர் உணர்த்த முற்பட்டார். அது ஏறக்குறைய ஒரு பொறிதான். விக்கினேஸ்வரன் சம்மந்தரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் தலைமைப் பொறுப்பை நோக்கி முன்னகர வேண்டியிருக்கும். ஏற்கவில்லை என்றால் தலைமைப் பீடத்திற்கு எதிராக கருத்துக் கூறுவதை நிறுத்தவேண்டியிருக்கும். கடந்த இரு ஆண்டுகளாக விக்கினேஸ்வரன் தனது தலைமைத்துவத்தை போதியளவு நிரூபித்திருக்கவில்லை. அப்படிப்பட்ட பொறுப்புக்களின் மீது ஆசை கொண்ட ஒருவராகவும் அவர் காணப்படவில்லை. அப்படிப்பட்ட ஆசைகள் இல்லை என்பதனால்தான் அவர் தலைமைத்துவத்துக்கு எதிராக வெளிப்படையாகப் பேசி வந்தார். எனவே அவர் தலைமைப் பொறுப்பை ஏற்கப் பின்னடிப்பார் என்ற ஒரு எதிர்பார்ப்போடுதான் சம்மந்தர் ஒரு பொறியைத் வைத்தார்.

விக்கினேஸ்வரன் அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ஆனால் ஒரு செயல் மூலம் மறைமுகமாக தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார். தமிழ் மக்கள் பேரவைக்கு தலைமை தாங்கியதன் மூலம் அவர் சம்பந்தருக்கு சூசகமாக பதில் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையானது கட்சிசார்பற்றது என்றும் எல்லாக் கட்சிகளுக்குமான ஒரு பொது இடையூடாட்டத் தளம் என்றும் கூறப்படுகிறது. அதற்குள் தமிழ் சிவில் சமூக அமையத்தைச் சேர்ந்தவர்கள் உண்டு. ஆனால் அதற்காக தமிழ் சிவில் சமூக அமையமும் பேரவையும் ஒன்றல்ல என்று சம்மந்தப்பட்டவர்கள் கூறுகிறார்கள். தமிழ் சிவில் சமூக அமையத்தில் இந்து நிறுவனங்களின் ஊடாட்டம் குறைவு. ஆனால் பேரவைக்குள் அப்படியல்ல. பேரவைக்குள் முக்கியஸ்தர்களாகக் காணப்படும் சிலர் தீவிர இந்துமத நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். கஜேந்திரகுமார் பேரவைக்குள் காணப்படுகின்றார். ஆனால் அதற்காக அவருடைய கட்சி நிலைப்பாடே பேரவையின் நிலைப்பாடும் அல்ல என்று காட்ட பேரவை முயற்சிக்கின்றது. விக்கினேஸ்வரன் தலைவராகக் காணப்படுகின்றார். ஆனால் அதற்காக பேரவைக்குள் வடமாகாண சபையும் அடங்கும் என்றும் கூறமுடியாது. விக்கினேஸ்வரனைப் போன்று சிந்திக்கும் பலர் கூட்டமைப்புக்குள் உண்டு. ஆனால் அவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. ஏனெனில் கட்சிகள் சார்பாக ஒவ்வொருவரையும் சிவில் அமைப்புக்கள் சார்பாக ஒவ்வொருவரையும் இதில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அதனால்தான் கூட்டமைப்புக்குள் இருந்த ஏனைய அதிருப்தியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே மேற்கண்டவை அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் பேரவையானது தன்னை கட்சிசாரா ஒரு பொது இடை ஊடாட்டத் தளமாகவே காட்டிக்கொள்ள முற்படுகிறது. ஆனால் அவர்களுடைய எல்லாப் பிரயத்தனங்களையும் மீறி பேரவையானது ஒரு அணிக்கு எதிரான சேர்க்கையாகவே பார்க்கப்படுகிறது. சம்மந்தன் - சுமந்திரன் அணிக்கு எதிரான ஒரு சேர்க்கையாகவே அது பார்க்கப்படுகின்றது. அது மெய்யாகவே ஒரு கட்சி சாராப் பொதுத் தளமாக வளர்ச்சிபெறுமா இல்லையா என்பது அதன் எதிர்கால நடவடிக்கைகளிலேயே தங்கியிருக்கிறது. ஆனால் தற்பொழுது அரங்கில் உள்ள கட்சிகளின் செயற்பாடுகளில் திருப்தியுறாத ஒரு போக்கின் விளைவே பேரவை எனலாம். யாழ்ப்பாணத்தில் வெளிவரும் இரண்டு பத்திரிகைகள் பேரவைக்கு ஆதரவாகக் காணப்படுகின்றன. ஒரு பத்திரிகை எதிராகக் காணப்படுகின்றது.

அதன் முதல் அமர்வில் பங்குபற்றியவர்களில் செயற்பாட்டாளர்களின் தொகை ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டது. ஏறக்குறைய தமிழ் சிவில் சமூக அமையத்தைப் போல எனலாம். தமிழ் சிவில் சமூக அமையத்திலும் செயற்பாட்டாளர்களின் தொகை ஒப்பீட்டளவில் குறைவு. அது கீழிருந்து மேல் நோக்கிக் கட்டி எழுப்பப்பட்ட ஒரு சிவில் அமைப்பு அல்ல. பெருமளவிற்கு மேலிருந்து கீழ் நோக்கி கட்டி எழுப்பப்பட்ட ஒரு பிரமுகர் சபைதான். அது உருவாக்கப்பட்ட காலகட்டத்தில் மனோகணேசன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். தானும் ஒரு பிரஜைகள் குழுவை மேல் மாகாணசபையில் அமைக்கப் போவதாகக் கூறினார். அப்பொழுது நான் அவரிடம் சொன்னேன் இது அதன் மெய்யான பொருளில் ஒரு பிரமுகர் சபையே என்று. ஆனால் அது அன்றைய காலகட்டத்தின் தேவையும் கூட. ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சிக்காலத்தில் வெற்றிவாதத்தின் கீழ் அதற்கொரு பெறுமதியான பாத்திரம் இருந்தது. அந்நாட்களில் பிரமுகர்கள்தான் ஓரளவுக்குத் துணிச்சலாகப் பேச முடிந்தது. அவர்களுக்குத்தான் அவர்களுடைய பதவிநிலை காரணமாகவும் பிரபல்யம் காரணமாகவும் சமூகப் பெறுமானம் காரணமாகவும் ஒருவித பாதுகாப்பு இருந்தது. வன்னியில் இருந்து வந்தவர்களும் ஏற்கனவே அரசியலில் தீவிர நிலைப்பாட்டோடு இருந்தவர்களும் அரசியலில் அஞ்ஞாத வாசம் செய்த காலகட்டம் அது. வன்னியில் இருந்து வந்தவர்கள் அரசியல் கதைத்தால் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படலாம் என்ற ஒரு அச்சம் அப்பொழுது நிலவியது. தாங்கமுடியாத தோல்வியினாலும் அவமானத்தினாலும் கூட்டுக்காயங்களினாலும் துவண்டுபோய்க் கிடந்த ஒரு சமூகத்தின் மத்தியில் சிவில் சமூக அமையமானது துணிச்சலோடு அனைத்துலக சமூகத்திற்குக் கேட்கக்கூடிய விதத்தில் தமிழ் மக்களின் நியாயங்களை உரத்துக் கூறியது. அந்நாட்களில் பிரமுகர்களாக இருந்தவர்களால்தான் அவ்வாறு பேசக் கூடியதாக இருந்தது. அதே சமயம் லலித், குகனைப் போன்றவர்கள் காணாமல் போகக் கூடிய ஒரு சூழலும் நிலவியது. எனவே அன்றைக்கு இருந்த பயங்கரமான சூழ்நிலையின் பின்னணியில் வைத்தே தமிழ் சிவில் சமூக அமையத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இது ஒரு விதத்தில் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட உடனடுத்த காலகட்டத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பெற்ற கவனிப்புக்கு நிகரானது. புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட உடனடுத்த காலப்பகுதியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது ஏதோ ஒரு நம்பிக்கையை ஓரளவுக்காயினும் கட்டி எழுப்ப முற்பட்டது. ஆனால் பின்வந்த ஆண்டுகளில் காலத்தின் தேவைக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்வதிலும் செயற்படுவதிலும் அந்த அமைப்பு போதிய வெற்றியைப் பெறத் தவறியது.

தமிழ் சிவில் சமூக அமையமும் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான ஒரு காலகட்டத்தில் அதிகம் கவனிப்புக்குரியதொன்றாக மேலெழுந்தது. இவ்வாண்டு ஜனவரி மாதம் ஆட்சி மாற்றத்தின் பின் சிவில் வெளி ஒப்பீட்டளவில் அதிகரித்தபொழுது அவ்வமைப்பானது தன்னை அதிகமதிகம் செயற்பாட்டு ஒழுக்கத்திற்குரியதாக தகவலமைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் கொள்கைப் பிடிப்புள்ள ஒரு கருத்துருவாக்க சிவில் அமைப்பு என்பதற்கும் அப்பால் ஒரு செயற்பாட்டு இயக்கமாக அந்த அமைப்பால் வெற்றிபெற முடியவில்லை.

இத்தகையதொரு பின்னணியில் தமிழ் சிவில் சமூக அமையத்துள் அங்கம் வகிக்கும் பல சிவில் அமைப்புக்களும் இப்பொழுது தமிழ் மக்கள் பேரவைக்குள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆட்சி மாற்றத்தின் பின்னரான அதிகரித்துவரும் சிவில் ஜனநாயக வெளிக்குள் செயற்பாட்டு இயக்கங்களுக்கான தேவை அதிகரித்து வரும் ஒரு பின்னணியில் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் சிவில் சமூக அமையத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக இதைக் கருதத் தேவையில்லை. ஆனால் ஏற்கனவே இருக்கின்ற கட்சிகள் சிவில் அமைப்புக்கள் போன்றவற்றின் போதாமைகளின் விளைவே பேரவை எனலாம். ஆயின் ஏற்கனவே இருக்கும் கட்சிகளும், அமைப்புக்களும் செய்யத் தவறிய ஏதோ ஒன்றை மக்கள் பேரவை செய்யப் போகிறதா?


அதன் முதலாவது அமர்வில் பங்குபற்றியவர்களில் பெரும்பாலானவர்களின் அரசியல் மற்றும் செயற்பாட்டு ஒழுக்கங்களை வைத்துக் கணித்தால் அந்த அமைப்பானது ஒரு செயற்பாட்டு இயக்கமாக மேலெழுவதற்குரிய அடிப்படைகள் பலவீனமாகவே காணப்படுகின்றன. அதேசமயம் தமிழ் சிவில் சமூக அமையத்தைப் போலவே பேரவையும் அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கவல்ல ஓர் அமைப்பாக மேலெழுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகத் தெரிகின்றன. ஆனால் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் தன்னுள் கொண்டிருக்கும் ஓர் அமைப்பானது எப்படி அதே அரசியல் கட்சிகளுக்கு எதிராக அழுத்தத்தைப் பிரயோகிக்கப் போகிறது? அல்லது இதை வேறுவிதமாகக் கேட்டால் யாருக்கு எதிராக அழுத்தத்தைப் பிரயோகிக்கப் போகிறது?

இக்கேள்விகளுக்கான விடைகள் யாவும் ஓரிடத்தையே வந்து சேரும்.

அதாவது சம்மந்தன் - சுமந்திரன் அணிக்கு எதிரான ஓர் அழுத்தப் பிரயோக அமைப்பாகவே பேரவை நடைமுறையில் செயற்பட வேண்டியவரும். ஆனால் இதை சில அரசியல்வாதிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஓர் அமைப்பு என்று குறுக்கிக் கொள்வதை விடவும் அதைவிட பரந்தகன்ற கோட்பாட்டு தளத்தில் வளர்த்தெடுப்பதே தமிழ்மக்களின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை முக்கியமானது.

அதாவது ஈழத்தமிழர்கள் ஒரு தேசமாகச் சிந்திக்கவேண்டுமா? இல்லையா? என்ற கோட்பாட்டுத்தளமே அது. ஈழத்தமிழர்கள் ஒரு தேசமாகச் சிந்திக்கும் போதுதான் தமிழ்த்தேசியத்தின் அடிப்படைகளைப் பலப்படுத்த முடியும். தமிழ் மக்களை இலங்கை அரசாங்கமும் உலக சமூகமும் ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் பொருத்தமான ஒரு தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பைப் பற்றி சிந்திக்கவும், உரையாடவும் முடியும். அப்படியொரு நிலைமை உருவானால்தான் ஒற்றையாட்சி கட்டமைப்புக்கு வெளியே சென்று அரசியல் அமைப்பை மீள வரைய முடியும். ஒற்றையாட்சிக்கு வெளியே சென்று சிந்தித்தால்தான் இலங்கைத்தீவின் அரசியல் அமைப்பை ஆகக் கூடிய பட்சம் பல்லினத்தன்மைமிக்கதாக மீள வரைய முடியும். வரப்போகும் ஜனவரி 09 இல் இருந்து நாடாளுமன்றமானது அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு பின்னணியில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகச் சிந்திப்பதற்குரிய அடிப்படைகளை பலப்படுத்தினால்தான் அரசியல் அமைப்பு நிர்ணய சபையை உரிய தயாரிப்புக்களோடு எதிர்கொள்ள முடியும். எனவே பேரவையின் தோற்றத்தை கூட்டமைப்பின் தலைமைக்கு எதிரானது என்று வியாக்கியானப்படுத்துவதை விடவும் ஒரு தேசமாகச் சிந்திப்பதற்குரிய ஒரு இடை ஊடாட்டத் தளத்தைக் கட்டி எழுப்பும் முயற்சி இது என்று பார்ப்பதே நல்லது.

அதேசமயம் கூட்டமைப்பின் தலைவர்களும் கொழும்பில் உள்ள சிங்களத் தலைவர்களும் உலக சமூகமும் இது விடயத்தில் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடம் இருக்கிறது. தமிழ் சிவில் சமூக அமையம் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புக்கள் தோன்றுவதற்கான ஒரு தேவை எப்பொழுதும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறது என்பதுதான் அது. இந்த அமைப்புக்கள் சில சமயம் பின்னாளில் காலாவதியாகக் கூடும். ஆனால் அந்த வெற்றிடத்தை வேறொரு புதிய அமைப்பு நிரப்பும். அதாவது தமிழ்தேசிய உணர்வு எனப்படுவது காலத்துக்குக் காலம் தன்னை ஏதோ ஒரு விதத்தில் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாவங்களுக்கு பரிகாரமாகும் நோன்பு

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் நோன்பும் ஒன்றாகும். நோன்பு பாவங்களிலிருந்தும், நரக வேதனையிலிருந்தும் பாதுகாக்கும் கேடயமாகத் திகழ்கின்றது. நாம் நோற்கும் நோன்பின் மூலம் எமது பாவங்கள் அழிக்கப்படுகின்றன. பாவங்களை அழிக்கும் விஷேட அம்சம் நோன்பில் உள்ளடங்கியிருப்பதால்தான் பல்வேறுபட்ட குற்றங்களுக்குப் பரிகாரமாக நோன்பு பரிந்துரைக்கப்படுகின்றது. இந்த வகையில் நோன்பைக் குற்றப் பரிகாரமாகப் பரிந்துரைக்கும் சில குர்ஆனின் சட்டங்கள்.



"அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவு செய்யுங்கள். (அதனை நிறைவு செய்ய முடியாதவாறு) நீங்கள் தடுக்கப்பட்டால் பலிப்பிராணியில் சாத்திய மானதுதான் (அதற்குப்) பரிகாரமாகும். பலிப் பிராணி தனது எல்லையை அடைகின்ற வரையில் உங்கள் தலைகளை சிரைக்க வேண்டாம். ஆனால், உங்களில் எவரேனும் நோயாளியாக அல்லது தனது தலையில் தொந்தரவு தரும் பிணி உள்ளவராக இருந்தால் (அவர் தலையை சிரைக்கலாம்). ஆனால் அதற்காக நோன்பு நோற்பது அல்லது தர்மம் செய்வது, அல்லது அறுத்துப் பலியிடுதல் (ஆகியவை) பரிகாரமாகும். நீங்கள் பாதுகாப்பாக (மக்காவை) அடைந்து உம்ராவை முடித்து விட்டு ஹஜ்ஜ" வரை (தடுக்கப்பட்டவைகளில் தமத்து:. முறையில்) சுகத்தை அனுபவித்தால் பலிப் பிராணியிலிருந்து சாத்தியமானது பரிகாரமாகும். (உங்களில் எவர்) அதைப் பெற்றுக்கொள்ளவில்லையோ அவர் ஹஜ் காலத்தில் மூன்று நாட்களும் (ஊர்) திரும்பியதும் ஏழு(நாட்களு)மாக நோன்பு நோற்கட்டும். இவை பூரணமான பத்து (நாட்)களாகும். இ(ச் சட்டமான)து எவருடைய குடும்பம் மஸ்ஜிதுல் ஹராமின் அருகில் வசிக்கவில்லையோ அவருக் குரியதாகும். அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். இன்னும், நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்." *(2:196)*

தொடரும் .. ..

**– இஸ்மையில் –**

## ஜெபம்



என் தலைவரே! என் இதழ்களைத் திறந்தருளும் அப்பொழுது, என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும். ஏனெனில், பலியினால் உம்மை மகிழ்விக்க முடியாது நான் எரிபலி செலுத்தினாலும் நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை. கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே கடவுளே! நொறுங்கிய, குற்றமுணர்ந்த உளத்தை நீர் அவமதிப்பதில்லை. *சங்கீதம் 51:15-17*

**கடவுளிடம் நாம் செய்யும் ஜெபம் சில வேளைகளில் கேட்கப்படுவதில்லையே ஏன்?**

கடவுள் நம்மைவிட ஞானம் மிக்கவர். யார் யாருக்கு என்ன தேவை எப்போது தேவை என்பதை அவர் அறிவார். அவர் எப்போழுதும் நமக்கு நன்மையே செய்வார். சிலவேளைகளில் கடவுளின் திட்டம் மனித ஞானத்திற்கு எட்டுவதில்லை. ஆகவே கடவுள் நம் ஜெபத்தை கேட்காதவர் போல் நமக்குத் தெரிகிறது.

சிலவேளைகளில் சுயநலத்தோடு ஜெபம் செய்கிறோம். அரசர் சாலமோன் கடவுளிடம் ஞானத்தைக் கேட்டார். பொருட்செல்வமோ அல்லது படையோ, மேலும் அதிகாரத்தையோ அல்லது மேலும் அரசுகளையோ கேட்காததால் கடவுள் அனைத்தையும் அவருக்குக் கொடுத்தார்.

அல்லது கடவுளின் திட்டத்திற்கு மாறுபட்டு நம் எண்ணங்கள் அமைவதால் நம் ஜெபம் கேட்கப்படுவதில்லை. சில சமயங்-களில் நம் ஜெபம் நேரடியாகக் கேட்கப்படாமல் வேறுவிதமாக நிறைவேற்றப்-படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக கடவுள் நம் ஜெபங்களைக் கேட்டருள்வார் என்ற ஆழ்ந்த விசுவாசமும் கடவுளின் அன்பும் பராமரிப்பும் நம் வாழ்வில் நிலைபெறும் என்ற உறுதியான நம்பிக்கையும் அனைத்திலும் கடவுளின் சித்தம் நிறைவேற்றப்படவும் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

அவர்கள் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு ஓர் உவமை சொன்னார்.

தொடரும் .. .

www.bible.me

## இரவில் தூக்கம் வராது தவிக்கின்றீர்களா???



உணவு எந்தளவு முக்கியமானதோ அதே அளவு தூக்கமும் முக்கியமானதே. தூக்கம் என்பது உடல் மற்றும் மனதிற்கு புத்துணர்ச்சியை வழுங்கக்கூடியது. அதே போன்று தூக்கம் என்பது எப்போது பிஸியாகவே இருக்கும் மூளைக்கும் சிறிது ஓய்வை தரக்கூடிய ஒன்றாகும். இப்பிரச்சினைக்கான காரணங்களையும், அறிகுறிகளையும் கடந்தவார இதழில் கண்ணுற்றோம். அதற்கான

### சிகிச்சைகள் என்ன?

பொதுவாக இத்தகைய தூக்கமின்மைக்கு எந்த சிகிச்சையும் தேவைப்படாது. ஒரு சில பயிற்சிகள் மூலமே இதனை குணப்படுத்தலாம்.

பொதுவாக தூங்குவதற்கு என்று குறிப்பட்ட நேரத்தை வைத்துக்கொள்ளுங்கள். தினமும் அந்த நேரத்துக்குள் தூங்க சென்றுவிடுங்கள். மேலும், சிகரெட், மது போன்றவற்றை தூங்குவதற்கு முன்பாக எடுத்துகொள்வதை தவிர்க்க வேண்டும்.

போதுமான அளவு உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அதேவேளையில் தூங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் உடற்பயிற்சி செய்வதை தவித்துவிடுங்கள்.

இல்லையென்றால் தூக்கத்தின் தன்மை பாதிக்கப்படும்.நாம் தூங்கும் இடத்தை சுத்தமாகவும், இருட்டாகவும் வைத்துக்கொள்ளுங்கள்.

அதே போன்று சத்தம் ஏதும் அதிகம் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். புத்தகம் படிப்பது, இசையை கேட்பது போன்றவை மூலம் மனதை அழுத்தத்தில் இருந்து காப்பாற்றலாம்.

முடிந்த வரை கவலைகள், வருத்தங்கள் ஆகியவற்றை தூங்கும் போது அசைப்போடாதீர்கள். இதை தொடர்ந்து பின்பற்றிவந்தால், நாளடைவில் தூக்கமின்மை காரணமாக நமக்கு ஏற்படும் நோய்களில் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ளலாம்.

முற்றும் .. ..



முத்தம் கொடுக்கும் போது இன்று கண்ணை மூடிக் கொள்ளவில்லையே ஏன் டார்லிங்?

**போன தடவை இப்படித்தான் நான் கண்ணை மூடியதும் நீங்கள் என் கைப் பையிலிருந்து பணத்தை எடுத்திட்டீங்க...**

( _________ )




அடுத்த வார இதழில்
குறுக்கெழுத்து போட்டி புதிர்
உங்கள் மலைமுரசில்
பிரசுரிக்கப்படும். . . .

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : பிறந்திருக்கும் ஆங்கில புத்தாண்டு வருடத்தில் உங்களுக்கு எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். குடும்பத்தில் சற்று விட்டுக் கொடுத்து நடக்கவும். திருமண சுபகாரியங்கள் கைகூடும். வயிறு தொடர்பான சிறு சிறு நோய்கள் உண்டாக வாய்ப்புள்ளது. போட்டி காணப்படினும் அனைத்தையும் வெற்றி கொண்டு பலன்களைப் பெருவீர்கள்.

பணவரவுகள் தேவைக்கேற்றபடி இருக்கும் என்றாலும் பெரிய தொகைகளை கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுத்துவதை தவிர்க்கவும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது கவனம் தேவை. முதல்பாதி பொருளாதாரம் ரீதியில் நல்ல பலன் உண்டு. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். பிற்பாதியில் எதிலும் கவனமுடன் செயல்படுவது சாலச்சிறந்தது. பண வரவுகள் ஏற்ற இறக்கமாக காணப்படும். மருத்துவ செலவுகள் அதிகரிக்க வாய்ப்புண்டு. எதிர்நீச்சல் போட வேண்டியிருக்கும்.



**ரிஷபம்** : உங்களுக்கு இது ஒரு மந்தமான வாய்ப்பு. பண வரவுகளில் சிக்கல்கள் தோன்றினாலும் எதிர்பாராத உதவிகளால் நிலைமை மாற்றமடையும். மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். கடனாக கொடுத்த பணத்தை மீளப் பெறுவதில் சிக்கல் காணப்படும்.

உத்தியோகத்தர்களுக்கு பணியில் நிம்மதி நிலை காணப்படும். எதிலும் திறம்பட உழைப்பீர்கள். அலைச்சல்கள் அதிகரிக்கலாம். முற்பாதி சுமாராகவே காணப்படும். பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை பயக்கும். பிற்பாதியில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத இட மாற்றங்களும், பதவி உயர்வுகளும் கிடைக்கும். பண வரவில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் எதிர்ப்புகள் குறையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் அதிகம் தேவை. திருமண வயதை அடைந்தவர்களுக்கு வரன் தேடி வரும். கடந்தகால பிரச்சினைகள் விலகும். கடன்சுமை குறையும்.



**மிதுனம்** : இது சாதகமான அமைப்பாகும். பண வரவிற்கு பஞ்சம் இருக்காது. தடைப்பட்ட திருமண சுப காரியம் கைகூடும். கடன்கள் அனைத்தையும் படிப்படியாக குறைப்பீர்கள். கொடுத்த கடன்களை கூட மீள பெற்றுக் கொள்வீர்கள். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணியில் தடைப்பட்ட உயர்வுக் கிடைக்கப்பெறும்.

முதற்பாதியில் தன வரவு அதிகமாக காணப்படும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை செழிக்கும். நினைத்த காரியங்கள் யாவும் நிறைவேறும். மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறும். பிற்பாதி கூட நல்ல பலனையே தரும். இருப்பினும் பண விடயத்தில் கவனமுடன் செயல்படவும். எதிரிகளாக இருந்தவர்கள் நண்பர்களாகுவார்கள். வெளிநாடு சென்று பணிபுரியும் வாய்ப்பு உண்டாகும். எதிர்பாராத உதவிகள் தேடி வரும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். முன்னர் பெற்ற கடன்களை செலுத்தி முடிப்பீர்கள். சற்று வேலைப்பளு அதிகரிப்பினும் நல்ல பலன் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 09

01. 1. தேசப்படங்களில் பிரதான பாதையை காட்டப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
1. பச்சை 2. சிவப்பு 3. செம்மஞ்சள் 4. கறுப்பு

02. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்

03. எரிந்து கொண்டிருக்கும் தணல் நெருப்பில் காய்ந்த உப்புக்கட்டியை இடும்போது நடைபெறுவது?
1. உப்பு கட்டி உருகுதல் 2. உப்புக்கட்டி எரிதல்
3. தீ அணைந்து போதல் 4. உப்புக்கட்டி சத்தத்துடன் வெடித்தல்

04. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்

05. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளி விட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
1. 33 2. 34 3. 32 4. 35

06. மகாசேனன் கட்டுவித்த குளம் யாது?
1. திசாவாவி 2. கலாவாவி
3. மின்னேரியாக்குளம் 4. பராக்கிரம சமுத்திரம்

07. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளி விட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
1. 33 2. 34 3. 32 4. 35

08. உப்பை போட்டு வைக்க பொருத்தமான பாத்திரம் எது?
1. அலுமினியப்பாத்திரம் 2. கண்ணாடிப் பாத்திரம்
3. எவர்சில்வர் பாத்திரம் 4. பித்தளைப் பாத்திரம்

09. வலைப்பந்தாட்டக் குழுவிலுள்ள ஆட்டவீரர் தொகை (பதிலாட்டக்காரரைத் தவிர)
1. 6 2. 7 3. 8 4. 9

10. உணவு நஞ்சடையும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?
1. மண்பாத்திரங்களில் உணவு சமைத்தல்
2. பீங்கான் பாத்திரங்களில் உணவு பரிமாறுதல்
3. அலுமினியப் பாத்திரங்களில் புளிப்பான உணவைச் சமைத்தல்
4. சமைத்த உணவு வகைகளை நன்றாக மூடி வைத்தல்.

11. 100செ.மீ நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 1.5செ.மீ நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5செ.மீ வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

12. தேசப்படங்களில் பிரதான பாதையை காட்டப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
1. பச்சை 2. சிவப்பு 3. செம்மஞ்சள் 4. கறுப்பு

13. 1. ஒரே குழுவாக ஓரிடத்தில் வாழும் பிராணிகளின் கூட்டம் எது?
1. காகம் 2. கிளி 3. வௌவால் 4. கறையான்

14. இளம் மஞ்சள் நிறம் சார்ந்த முட்டைகளை இட்டு இனப்பெருக்கும் பிராணி எது?
1. தேனி 2. நத்தை 3. தவளை 4. ஓணான்

15. இலை குழைகளை உக்கலடையச் செய்து மண்ணின் வளத்தை அதிகரிக்கும் பிராணி எது?
1. கறையான் 2. மண்புழு 3. காளான் 4. காகம்

16. ஆடையில் படிந்த தார் கறையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள்?
1. மண்ணெண்ணெய் 2. எலுமிச்சம் புளி
3. நல்லெண்ணெய் 4. வினாகிரி

17. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம்?
1. அயடீன் குறைபாடு 2. விற்றமின் குறைபாடு
3. இரும்புச்சத்துகுறைபாடு 4. கல்சியக்குறைபாடு



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு






### குறை

சாந்தனு என்ற இளைஞனுக்கு நகரத்தில் வேலை கிடைத்தது. அங்கேயே தங்கி வேலை பார்த்து வந்தான். அவனுக்குத் திருமணம் நடந்தது. தன் மனைவியை நகரத்திற்கு அழைத்து வந்து அவளுடன் குடும்பம் நடத்தினான்.

முதல்நாள் வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினான். இங்கே யாருமே சரி இல்லை. எல்லாரும் நம்மைப் பார்த்து பொறாமைப்படுகின்றனர். என்னைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொள்கின்றனர். யாரும் என்னுடன் பேசுவது இல்லை! என்று குறை சொன்னாள்.

நீ இப்போதுதான் இங்கே வந்திருக்கிறாய். உன்னுடன் பழக அவர்கள் தயக்கம் காட்டியிருக்கலாம். நீ அதைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய். நாளாக நாளாக எல்லாம் சரியாகி விடும். சிறிது பொறுமையாக இரு! என்றான் அவன்.

அடுத்த நாள் அவன் வேலை முடித்து வீடு திரும்பினான். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் நம்மைக் குறை சொல்லிக் கொண்டிருந்தனர். நான் வருவதைப் பார்த்ததும் பேசுவதை நிறுத்தி விட்டனர். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை! என்றாள் அவள்.

இப்படியே அவள் நாள்தோறும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றி குறை சொன்னாள். இனி நம்மால் இங்கே குடி இருக்க முடியாது. வேறு இடம் பாருங்கள், என்று நச்சரிக்கத் தொடங்கினாள். நாம் அதிகம் பழகாததால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் குறை தெரியாமல் போயிற்றா? மனைவி சொல்வது போல அவர்கள் பொல்லாதவர்கள்தானா? என்று குழம்பினான் அவன்.

அப்போது பெற்றோர்களிடம் இருந்து அவனுக்கு ஒரு மடல் வந்தது. அதில், ஊர்த் திருவிழா ஒருவாரம் நிகழ உள்ளது. நீ குடும்பத்துடன் வர வேண்டும் என்று எழுதி இருந்தது.

மனைவியிடம் அந்த மடலைக் காட்டினான். என் பெற்றோர்கள் ஊர்த் திருவிழாவிற்கு நம்மை அழைத்திருக்கின்றனர். எனக்கு அலுவலகத்தில் நிறைய வேலை உள்ளது. என்னால் வர முடியாது. நீ மட்டும் சென்று திருவிழா முடியும் வரை இருந்துவிட்டு வா! என்றான்.

அவளும் அவன் சொன்னது போலவே ஊருக்குச் சென்றாள். அங்கே ஒருவாரம் தங்கிவிட்டு வந்தாள்.

பயணம் எப்படி இருந்தது? என் வீட்டில் உள்ளவர்கள் உன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டார்களா? என்று கேட்டான் அவன்.

அங்கே மாடு மேய்க்கும் சுப்பனே என்னை எதிரியைப் போலப் பார்த்தான். மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இனி என்னை அங்கே போகச் சொல்லாதீர்கள்! என்று சலித்துக் கொண்டாள் அவள்.


சுப்பன் மாடுகளை மேய்ப்பதற்காக அதிகாலையில் வீட்டைவிட்டுச் செல்வான். இரவில்தான் வீடு திரும்புவான். பகலில் அவனை பார்ப்பதே அரிது. இரவிலும் எப்போதாவதுதான் கண்ணில் படுவான். அவன் இவளை எதிரி போலப் பார்த்ததாகச் சொல்கிறாள்.

யாரைக் கண்டாலும் அவர்கள் தன்னை பார்ப்பதாகவும், தன்னைப் பற்றிதான் பேசுவதாகவும் நினைப்பதுடன், அடுத்தவர்களை குறை கூறும் இயல்பு இவளுக்கு அதிகம் உண்டு. நல்ல வேளை, இவள் பேச்சை நம்பி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சண்டை போடாமல் இருந்தேனே. இந்தக் கெட்ட பழக்கத்தை இவள் விடும்படி செய்ய வேண்டும். அதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்! என்ற முடிவுக்கு வந்தான் சாந்தனு.



**– எதுவாயினும் தீர விசாரிப்பதே சாலச்சிறந்தது –**

**சிந்திக்க ......**
**நீ குறை இல்லாதவன் மனிதன் இல்லை: அதைக் குறைக்கத் தெரியாதவன் மனிதனே இல்லை!!!**




**பாராட்டு பெறுவோர்**


குணநாதன் சதுர்ஷன்
572ஏ. ஏகாம்பரம் வீதி.
திருகோணமலை

குணநாதன் கபிலேஷ்.
14. ஸ்ரீ. ரெலிகொம் வீதி
திருகோணமலை

தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 10 வயதான மாணவர்கள் மாத்திரம்
***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ. கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

### வண்டு

– கு.ஜகநாத்ரீ –
தரம்04,
கோபாலபுரம் அ.த.க பாடசாலை



வண்ண வண்ண பூக்களிலே
வண்டு வந்து மேயுது
ரீங்காரம் செய்து கொண்டு
நடனம் எல்லாம் ஆடுது

எண்ணம் போல மது உண்டு
இனிய கீதம் பாடுது
மயங்கி மயங்கி விழுந்து கொண்டு
நண்பர்களை கூப்பிடுது

ஆறு காலால் நடனமாடி
கண்களை மயக்குது
மது தந்த பூக்களுக்கு
நன்றி சொல்லி பறக்குது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி


## பாடம் : கணிதம்

1. 8% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூபா 8 பங்குகளை 25% சமத்திலும் கூடிய விலையில் வாங்குவதற்கு குமணன் 11000 ரூபாவை முதலீடு செய்தார்.
   (i) ஒரு பங்கை வாங்கிய விலை என்ன?
   (ii) பங்குலாபம் என்ன?

2. (i) $(x+{}^1/_x)^2$ இன் விரிவை எழுதுக.
   (ii) $x^3+({}^1/_x)^3$ ஐ காரணிப்படுத்துக.
   (iii) $x+{}^1/_x = 3$ எனின், $x^2+({}^1/_x)^2$, $x^3+({}^1/_x)^3$ என்பவற்றின் பெறுமானத்தைக் காண்க.

3. $y=(x-3)^2$ என்னும் வரைபில் ,
   (I) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
   (ii) இழிவுப் பெறுமானம் யாது?
   (iii) திரும்பற்புள்ளியை காண்க.
   (iv) $y+5 = (x-3)^2$ என்னும் வரைபின் இழிவுப் பெறுமானத்தை உய்த்தறிக.

4. 1. ஒரே எண் தோன்றுவதற்கான நிகழ்தகவைக் காண்க.
   2. சதுரமுகி தாயக்கட்டையில் முக்கோண எண் கிடைப்பதை A என குறிக்க.
   3. நான்முகி தாயக்கட்டையில் 3 இன் மடங்கு கிடைப்பதை B என குறிக்க.
   4. A, B சாரா நிகழ்ச்சி என காட்டுக.




5. மோட்டார் வண்டி ஒன்று 150Km தூரத்தை மாறாக்கதி $NKmh^{-1}$ செல்கின்றது. கதி மணித்தியாலத்திற்கு 20Km ஆல் குறைந்தால் அப்பிரயாண நேரம் 2 மணித்தியாலத்தினால் அதிகரிக்கின்றது. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி இருபடிச்சமன்பாடு ஒன்றை உருவாக்கி புகைவண்டியின் மாறாக்கதியைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. கண்டி இராச்சியத்திலே போர்த்துகேயர் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு கையாண்ட தந்திரம்
   (1) கோணப்பு பண்டாரனை அரசனாக்கியமை
   (2) தங்கள் பாதுகாவலின் கீழ் குசுமாதேவிக்கு அரசபதவி வழங்கியமை
   (3) கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பியமை
   (4) கண்டிப் பிரதானிகளின் உதவியை பெற்றுக் கொண்டமை

02. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை கி.பி 1815 இல் கைப்பற்றியமைக்கு சாதகமாக இருந்த காரணம் யாது?
   (!) நாயக்க வம்சம் பிரதானிகளுக்கு பிரத்தியோகமான சிறப்புரிமைகளை வழங்கப்பட்டமை
   (2) சிங்களப் பிரதானிகளின் சலுகைகள் ஒழிக்கப்பட்டமை
   (3) கண்டி அரசனால் மனிதாபிமானமற்ற தண்டனைகள் வழங்கப்பட்டன.
   (4) பிரதானிகளும் குடியானவர்களும் அரசன் மீது கொண்டிருந்த விசுவாசத்தை பலவீனப்படுத்தின.

03. அரசாங்கத்தினுடைய சட்டவாக்கமானது அரசியலமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நீதிமன்றம்
   (1) மஜிஸரேற் நீதிமன்றம் (2) உச்ச நீதிமன்றம்
   (3) மேன்முறையீட்டு நீதிமன்றம் (4) மேல் நீதிமன்றம்

04. இரண்டாம் உலகப்போரில் ஹிட்லர் பின்வரும் எந்நாட்டில் படையெடுத்த போது தீர்க்கமான தோல்வி ஏற்பட்டது.
   (1) ரூசியா (2) போலந்து (3) இங்கிலாந்து (4) பெல்ஜியம்

## பாடம் : விஞ்ஞானம்

01. $0.5 moldm^{-3}$ செறிவுடைய NaOH இன் 600ml கரைசலின் செறிவை $0.3 moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
   1. 200ml 2. 300ml 3. 400ml 4. 600ml

02. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?
   1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்.
   2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்.
   3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்.
   4. மின்முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்.

03. உலோகம் ஒன்றின் அடர்த்தி 2400Kg. அதன் கனவளவு $0.3m^3$ ஆகும். இவ்வுலோகத்தின் $1000Kgm^{-3}$ அடர்த்தி கொண்ட திரவத்தினுள் முழுமையாக அமிழ்த்தும் போது தோற்ற நிறை யாது?
   1. 2040N 2. 2400N 3. 4200N 4. 3300N

04. பழங்களுக்கு விசிறி வெட்டுப்படை உண்டாவது தாமதப்படுத்தப்படுவதன் மூலம் பழம் வருவதை தாமதப்படுத்தும் ஓமோன் எது?
   1. IAA 2. NAA 3. 2,4-D 4. BST

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### தொடர் மொழிக்கு ஒரு மொழி

26. மஞ்சரி - ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து.
27. மணி விழா - அறுபதாம் ஆண்டிறுதியில் எடுக்கப்படும் விழா.
28. மரபு - தொன்று தொட்டு வழங்கி வரும் முறைமை.
29. மாராயம் - மன்னர்களால்செய்யப்படும் சிறப்பு.
30. மானியம் - அரசர்கள் தமக்கு கீழ் வாழ்வோருக்குச் சன்மானமாக விடும் நிலம் அரசு மக்களின் நலம் கருதி வழங்கும் உதவித் தொகை.
31. மெய்க்கீர்த்தி - கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவருடைய புகழ்.
32. மெய்ப்பாடு - மனதில் நிகழும் நகைப்பு முதலான எட்டு வகைச் சுவைகளையும் புறத்துள்ளார்க்கும் புலப்படுமாறு தோற்றுவித்தல்.
33. மோனை - செய்யுட் சீர்களின் முதலெழுத்து ஒன்றி வர அமைப்பது.
34. வஞ்சிப்போர் - மண்ணாசை கொண்டு ஒரு மன்னன் மற்றொரு மன்னன் மீது தொடுக்கும் போர்.
35. விகடகவி - நகையும் பரிகாசமும் சேர்ந்து வர கவிபுனையும் ஆற்றல் படைத்தவன்.

#### பழமொழிகள்

அறிவாற்றல் மிக்க நம் முன்னோர் அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மைகளை அழகுறச் சுருக்கமாக பொருள் பொதிந்ததாக ஆக்கிக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறிய பழமையும் பொருட் செறிவும் பொருந்திய அம்மொழிகள் பழமொழிகள் என்றும் கூறப்படுகின்றன. எடுத்துக் கொண்ட விடயத்தை சுருக்கமாகவும் வலியுறுத்தி அழகாகவும் கூறவும் பழமொழிகள் உதவுகின்றன.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

***Fill in the blanks in the following text using the words given in the box.***

Long, ago, on a Saturday I walked towards the harbor which was not far from my home. the harbor was veery (1)................ it was just after (2)............. and the mist was (3)............ A few fishermen were (4).............. their nets patiently. I (5)................ jim who was (6)............. near his boat. I (7)............... over to him and (8).............. what he was doing. (9)............... we became friends. (10)............... invited me to go (11)............... to sea. I was (12)............... it was on that (13) my love of the (14)................ began. I be came a sailor and I have been one ever since.

***sitting , out , quiet , sea , delighted , saw , sunrise , he , day , soon went , asked , disappearing , sea***

05. குறித் ஒரு குறுக்கலை உருவாகும் போது ஒரு செக்கனுக்கு 2 தாழிகளும் 2 முடிகளும் உண்டாகின்றன. இந்த அலையின் இரு அடுத்துள்ள முடிகளுக்கிடையே இருக்கும் தூரம் 0.2m எனின், அலையின் வேகம் யாது?
   1. $0.1 ms^{-1}$ 2. $0.4 ms^{-1}$ 3. $0.8 ms^{-1}$ 4. $10 ms^{-1}$

06. இலங்கையை உலுக்கிய டெங்கு நோக்காவியான நுளம்பு மனிதனுக்கு எந்த நேரம் அதிகளவில் பாதிக்கின்றது?
   1. காலை 4.30 முதல் 10.30 வரையும், மாலை 4.00 முதல் 7.00 மணி வரையும்
   2. காலை 6.30 முதல் 10.00 வரையும், மாலை 3.30 முதல் 6.30 மணி வரையும்
   3. காலை 5.30 முதல் 9.30 வரையும், மாலை 4.00 முதல் 8.00 மணி வரையும்
   4. காலை 7.30 முதல் 9.30 வரையும், மாலை 5.00 முதல் 8.00 மணி வரையும்

07. 2006 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் எத் தடிப்பிலும் குறைவான பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டது?
   1. 30µ 2. 20µ 3. 35µ 4. 25µ

08. கீழ்வரும் பொருட்களில் நிறப்பூச்சுக்கள் தயாரிக்கும் போது பச்சை நிறத்திற்கு காரணமான இரசாயன பொருள் எது?
   1. $TiO_2$ 2. $PbCrO_4$ 3. $Cr_2O_3$ 4. C தூள்

09. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
   1. கம்பமேலணி 2. கனமேலணி
   3. படைகொண்ட மேலணி 4. பிசிர் மேலணி

10. செக்கனுக்கு 5m என்னும் கதியை மணிக்கு கிலோ மீற்றரில் தருவது பின்வருவனவற்றுள் எது?
   1. 5x1000x3600 2. 5x1000/3600 3. 5x3600/1000
   4. 5/1000x3600

**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**
**பல்தேர்வு**
ஆசிரியர் . பொன்னுத்துரை தவசிதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாடு...

"ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில்" எனத் தொடரும் உறுதிமொழியில் தமிழ்த் தேசிய இனம் உட்பட ஏனைய அனைத்துச் சிறுபான்மை- யினங்களையும் இருட்டடிப்புச் செய்து அவ்வுறுதிமொழி வெளியிடப்பட்டுள்ளதாகப் பல தமிழ் அலுவலர்கள் கவலை தெரிவித்தனர்.

ஒரு சுற்றறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வளவு பாரதூரமான தவறு நிகழ்வது தற்செயலானதா? அல்லது திட்டமிடப்பட்டதா எனத் தெரியாதிருப்பதாக அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

இவ்வாறு தமிழ்ச் சுற்றறிக்கை வெளியானவுடன் வடக்குகிழக்கிலுள்ள பல தமிழ் அலுவலகங்களின் அலுலர்கள் ஆங்கிலம் மூலம் வெளியிடப்பட்ட சுற்றிக்கையினை வாசித்து "ஒரே நாடு, ஒரே தேசம், ஒரே கொடியின் நிழலில்" எனத் தமது உறுதிமொழியை வாசித்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நல்லாட்சியின் கோதாவில் இயங்கும் தற்போதைய அரசின் செயற்பாடுகள் கூட இனமுரண்பாடுகளைத் தோற்று - விக்கும் வகையிலேயே அமைந்திருப் - பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

### இராணுவச் சுவீ....

படும் இக் குடியேற்றத்திற்கு சுமார் ஆயிரத்து ஐநூறு ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப் பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இச்சுவீகரிப்பு அங்குள்ள இராணுவத்தினரின் தேவைக்கு என மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், அக்காணிகளில் சுமார் நாற்பது குடும்பங்கள் வரையில் ர்திதாகக் குடியேற்றப்படும் முயற்சிகள் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

அதேவேளை இம்முயற்சிகளுக்குக் கிழக்கின் ஆளுனரே பின்னணியாகச் செயற்படுவதாக எண்ணியல் ஊடகம் ஒன்று குற்றஞ் சாட்டியுள்ளது.

இதேவேளை கோப்பாவெளிக் கிராமத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான சுமார் மூன்று ஏக்கர் காணிகளை வி. முரளீதரனின் (கருணா) முன்னாள் ஊடகச் பேச்சாளரும், தற்போது முஸ்லிம் அமைச்சர் ஒருவருடன் இயங்கி வருபவருமான அசாத் மவுலானா சுவீகரித்திருப்பதாக அவ்வெண்ணியல் ஊடகம் அறிக்கை யிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### 2016...

இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி 2016ஆம் ஆண்டை எமது நாட்டின் வரலாற்றில் ஒரு மாற்றமுடியாத சிறப்பான ஆண்டாக மாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார் சம்பந்தர்.


**வேலைவாய்ப்பு**

**கணனி வரைகலை**
**(டிசைனர்ஸ்)**
**கற்றவர்கள்**
**அல்லது**
**அனுபவம்**
**மிக்கவர்கள் தேவை**
**0777 555 738**


## புதிய அரசியல் அமைப்பு...

வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டிய தேவைகூட ஏற்பட்டிருக்காது என அவர் குறிப்பிட்டார்.

### 13 முழுமையாகக் கிடைத்..

தேவையில்லை என்பது பற்றி அவரது கருத்து என்ன என வினவியபோதே இவ்வாறு இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமையைக் கொண்ட ஒரு தேசிய இனமாகத் தம்மை நிலைநிறுத்திக்கொள்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரம் பெற்ற காலம் முதல் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அந்நெருக்கடிகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ளத் தம்மீது திணிக்கப்பட்ட ஆயுத அடக்கு முறையை அதே வழியில் எதிர்த்துப் போராடினர்.

ஈழத்தமிழர்கள் தேசிய இனமாகச் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வழிசமையும் காலம் மட்டும் இந்தத் தீவில் நிரந்தர சமாதானம் ஏற்படப் போவதில்லை. அதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த அடிபபடையில் 13வது திருத்தச் சட்டம் என்பது வெறுமனே ஒரு அதிகாரப் பரவலாக்கத்திற்கான கருவியாக இருக்கின்றதே ஒழிய ஈழத்தமிழர்களின் தேசிய இன இருப்புக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை நீக்கும் கவசமாக இல்லை. அவ்வாறு இருந்திருந்தால் இந்திய அரச மற்றும் இராணுவத்தின் துணையுடன்1987ல் 13வது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு மாகாண சபை அமைக்கப்பட்ட போதே தமிழரின் பிரச்சனைகள் தீர்ந்திருக்கும். இங்கு நிரந்தர சமாதானமும் ஏற்பட்டடிருக்கும். அவ்வாறு நிகழ்ந்ததா? என்றும் அவ் கேள்வி எழுப்பினார்.

எனவே கிழக்கின் முதல்வர் தெரிவித்துள்ள கருத்தானது சில வேளைகளில் முஸ்லிம் மக்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியதாக இருந்தாலும் தமது தேசிய இன இருப்பிற்காகப் போராடும் தமிழ் இனத்திற்கு என்றும் பொருந்தாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வாக நல்லாட்சி அரசினால் முன்மொழியப் - பட்டுள்ள நடவடிக்கைகளுள் ஒன்றான அரசியல் அமைப்புத் திருத்தமானது தனது சரத்துக்களில் ஈழத்தமிழினத்தைத் தேசிய இனமாக அங்கீகரிக்கும் பிரிவுகளைக் கொண்டிருக்காமல், வெறும் அதிகாரப் பரவலாக்கத்தை மட்டும் கொண்டிருக்கு - மானால், புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியல் அமைப்பும் வெற்றுக் காகிதமாகப் போய்விடக்கூடிய ஆபத்து இருப்பதாக இரா.ஸ்ரீஞானேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

## அதிகாரங்க...

இந்த நிலையில் புதிய அரசியல் அமைப்பின் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சம்"டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே அவ்வாறான ஒரு சமஷ்டி முறைமை உருவாக்கப் படும் பட்சத்தில் இலங்கையும் யூகோஸ்லாவியா போன்று பல துண்டுகளாக சிதறிப்போகும்.

எனவே புதிய அரசியல் அமைப்பின் ஊடாக நாடு பிளவு படும் வகையிலான எந்தவொரு அதிகாரப் பகிர்வும் வழங்கப்படக் கூடாது எனவும் புலம்பெயர் சிங்களவர் அமைப்பு வலியுறுத்திக் கொள்கின்றது. மேலும் நாடு பிளவடையும் வகையிலான எந்தவொரு சரத்தும் புதிய அரசியல் அமைப்பில் உள்வாங்கப்படவும் கூடாது என்றும் வலியுறுத்திக் கொள்ளவிரும்புகின்றோம் என்றும் அந்த அமைப்பின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### தென்னன்மரபடி....

தகரங்களைக் களற்றத் தொடங்கியுள்ளனர்.

இதனையடுத்து கிராம மக்கள் காவல்துறைக்கு உடனடி அழைப்பை மேற்கொண்டும் அவர்கள் அவ்விடத்திற்கு வராமையால் சிலர் ஒன்றாகக் கூடி தகரங்கள் களற்றப்படும் இடத்திற்குச் சென்றபோது அங்கிருந்தவர்கள் அலவாங்கொன்றைக் கைவிட்டுவிட்டு சென்றதாக மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கழற்றி அடுக்கப்பட்ட பல தகரங்களை மக்கள் காவிச்சென்று பாதுகாப்பான இடத்தில் வைத்துள்ளதாகத் தெரிகின்றது.

அதேவேளை வந்தவர்கள் சிங்களத்தில் பேசியதாகவும் தானியங்கிச் சுடுகலன்களை வைத்திருந்ததாகவும் வயல் காவலில் இருநதவர்களிடம் பேசிய போது தெரிய வந்துள்ளது.

அத்துடன் களவிற்கு வந்தவர்கள் இலக்கத் தகடு அற்ற உழவு இயந்திரமொன்றையும் கொண்டு வந்திருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

தென்னவன்மரபடி மக்கள் நாடாளுமன்ற தேசியப் பட்டியல் உறுப்பினர் துரைரெட்ணசிங்கத்திற்கு இவ்விடயத்தைத் தெரிவித்ததை அடுத்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு காவல்துறைக்குக் கோரிக்கை விடுத்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## முஸ்லிம்களுக்கான ...

முற்றாக்க் கரைந்து விட்டன. ஆனால் முஸ்லிம்களின் உரிமைகள் வெல்லப்பட வேண்டும் என்ற வெற்றுப் பேச்சு இன்றும் இருக்கின்றது.

எனவே முஸ்லிம் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை அரசாங்கத்திடம் முன்வைப்பதற்காக முஸ்லிம் அரசியல் மற்றும் சமூகப்பற்றுள்ள தலைவர்களை உள்ளடக்கிய பேரவை -யொன்று அமைக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள ஊடக விளம்பரங்களைச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்படு - கின்றனரே தவிர முஸ்லிம்களின் உரிமை பற்றியோ, வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவோ முனைப்புடன் செயற்படுவதில்லை என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

### நல்லாட்சியிலும்....

அதிகாரியாக நியமித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளத் தகுதியுடைய பலர் இருக்கும் போது தற்போது தனது மகளைப் பாதுகாப்பு அமைச்சு நிகழ்வின் பிரதம அதிதியாகத் தருவித்தமையானது கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக நல்லாட்சிக்கு வாக்களித்த ஒருவர் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்திருப்பதாக டெலிகிராப் சொல்கின்றது.

சனாதிபதியாகச் சிரிசேன தேர்வு செய்யப்பட்டு அடுத்த 18 நாட்களுக்குள் தனது தம்பியை ஸ்ரீலங்கா டெலிகொம்மின் முதல்வராக நியமித்தமை குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்துள்ள டெலிகிராப் இவ்விடயங்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டுள்ள போதும் சனாதிபதி ஊடகப் பிரிவு கடும் அமைதி காப்பதாகவும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

### தனியார்....

அரச பாடசாலைகளில் அதே பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களே இவ்வாறு கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயருக்கு முன்னால் அடை மொழியாக மட்டும் பிரபல பாடசாலைகளின் பெயர்களை சேர்த்து அதற்கு ஏற்றாற் போல கட்டணங்களை உயர்த்தியும் விடுகின்றனர். விசேட வகுப்பு, பிரத்தியோக வகுப்பு என பலவிதமான கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இதில் ஏழை மாணவர்களின் நிலை கேள்விக் குறியாகவுள்ளது.

மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான வகுப்பக்களை தனியார் கல்வி நிறுவனங்கள் நடாத்துவதால் நல்லோழுக்கங்களையும் ஆன்மீக நெறிகளை கற்பிக்கும் அறநெறி வகுப்பக்களுக்கு செல்ல இம் மாணவர்களுக்கு முடியாமல் உள்ளது.

எனவே தனியார் கல்வி நிலைய பணியகத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கொரியுள்ளார்.

## வீடு கட்டும் நிதி கையளிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் குடிசைகளில் வாழ்கின்ற 200 குடும்பங்களுக்கு கல் வீடுகளைக் கட்டுவதற்காக நிதி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

முதற்கட்டமாக 20,000 ரூபாய் பெறுமதியான காசோலைகள் மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

அவ்வப் பிரதேச செயலகங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட இக்குடும்பங்களுக்கு பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில், மூன்று கட்டங்களாக நிதியுதவி வழங்கப்படவுள்ளன.

ஒரு குடும்பத்துக்கு மொத்தமாக 50,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக மொறவெவவில் 12 பேரும் தம்பலகாமத்தில் 17 பேரும் வெருகலில் 14 பேரும் கிண்ணியாவில் 09 பேரும் குச்சவெளியில் 14 பேரும் சேருவிலவில் 19 பேரும் கந்தளாயில் 35 பேரும் பதவிசிறிபுரவில் 32 பேரும் கோமரங்கடவெலவில் 17 பேரும் திருகோணமலை பட்டணமும் சூழலில் 22 பேரும் மூதூரில் 09 பேரும் இதற்காக தெரிவுசெய்யப்பட்டனர்.

(பாசிம்)

## பெண்களுக்கு உரிமை

தெற்காசியாவிலேய மிகக்குறைந்த பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் உள்ள நாடாக இலங்கை காணப்படுவதால் உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் சகல கட்சிகளும் அதிகமான பெண்வேட்பாளர்களுக்கு இடமளிக்க திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம் கோரியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு




நடவடிக்கை முடிந்திருந்தாலும் மத்திய கிழக்கு நாடுகளின் மீது கண் பட்ட சம்பவம் அதுவாகக் கூட இருக்கலாம். முதன் முதல் அமெரிக்க படைகள் காலடி வைத்த சம்பவம் அதுதான். 1982 ஆம் ஆண்டு வரட்டும் இது தொடர்பில் இன்னும் கொஞ்சம் தெளிவாக புரியும் உங்களுக்கு. வணிகம் என்று வந்தவன் ஒரு பக்கம் அடிக்க, மிளகு, கறுவா என்று வந்தவன் எங்கள் கழுத்தை இறுக்கி எம்மை நாடற்றவனாக்கிய அனுபவப் பட்டறிவு தமிழர்களாகிய எமக்கு நிறையவே உண்டு.

ஆனால் இன்றைய மத்திய கிழக்கு மோதல்களுக்கு அடிப்படையாக இருந்த ஒரு சின்ன விடயம். ஆம். அதுதான் 1958 இல் நிகழ்ந்த லெபனான் உள்நாட்டு யுத்தம். என்ன கதை அளக்கிறீர்? என்று நீங்கள் கேட்கலாம். தெளிவு படுத்துகிறேன். மேற்கே மத்திய தரைக் கடலையும், தெற்கே இசுரேல், பாலஸ்தீனத்தையும், வடக்கு கிழக்காக சிரியாவையும் கொண்ட ஒரு சின்ன நாடுதான் இந்த லெபனான். ஏற்கனவே 2ம் உலக யுத்தத்தில் நேச், நாசி நாடுகளின் ஆக்கிரமிப்பு இதன் மீது இருந்தாலும், அமெரிக்க படைகள் அங்கு தரைதட்டி நிலை கொண்டு லெபனான் பெய்'ரூட் துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை கிளர்ச்சி-யாளர்களிடம் இருந்து காப்பாற்றி அந்த அரசுக்கு உதவிபுரிந்தது.

வெறும் பத்து நாட்களுக்குள் அந்த

1958 என்று சொல்ல இன்னும் ஒன்று எமக்கும், அதாவது தமிழர்களுக்கும் மறக்கமுடியாத வடுவை ஏற்படுத்திய ஆண்டு என்றும் நினைவுக்கு வருகிறது. பேரினவாதத்தின் காழ்ப்புணர்வுகள் அப்பட்டமாக வெளித்தெரிந்த ஆண்டும் அதுதான். தனிச்சிங்களம் சட்டம் கொண்டுவரப்பட்டதும், அதற்கெதிராக போராட்டங்கள் நிகழ்த்தப் பட்டதும் பல தமிழர்கள் படுகொலை செய்யப்-பட்டதும், கைது செய்யப் பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டதும் வரலாறுகள் கவனமாக பதிந்து மட்டும் வைத்திருக்கிறது. இந்த கலவரங்களில் சிக்குண்ட ஒரு உணர்ச்சிக் கவிஞன் எழுதிய தீர்க்க தரிசன வரிகள் யாதெனில் "இடிக்கிறாயா இடித்துப் பார், எலும்போடு தசை மோதி தமிழ் என்றே கூறும், வெடிகுண்டோடு விளையாடும்......" இப்படி போகிறது அந்த வரிகள். (வரிகளில் பிழை இருந்தால் திருத்தவும்)

சரி, அந்த லெபனான் யுத்தத்தில் இருந்து அமெரிக்காவின் அடுத்த விடயத்திற்குப் போகலாம். Bay of Pigs Invasion (1961) பன்றிகள் வளைகுடா யுத்தம். இதுவும் ஒரு பனிப்போரின் அங்கம். அதாவது, சாம்பல் பூத்த அனல் என்று தெரியாமல், கியுபாவுக்குள் விரலை விட்ட அமெரிக்க, கடைசியில் விரலை இழந்த சம்பவம்தான் அது. கியுபா புரட்சி முடிந்து சனவரி 01 - 1959 இல் விடுதலை அடைந்து கொண்ட அந்த நாட்டுடன் ஏன் தான் அப்படி ஒரு பகையை அமேரிக்கா கொண்டிருந்தது என்று அவர்களுக்கே தெரியாது. அமேரிக்கா, சுயகௌரவம் பார்த்து அந்த நாட்டிற்குள் விரலை விட்டது. விரலை விட்டு, விரல் துண்டு விழுந்த பின்னர்தான் அமெரிக்காவுக்கு புரிந்தது - வெட்டியது என்னோவோ சோவியத் தான் என்று.

CIA யின் திட்டமிடலில் குவாதமாலா நாட்டில் அமெரிக்க படைகள் 1500 அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு 17 ஏப்ரல் 1961 இல் கியுபா வின் பன்றிகள் வளைகுடாவுக்குள் தரையிறக்க-ப்பட்ட அமெரிக்க துருப்பினர் காஸ்ட்ரோவின் படைகளால் வெறும் மூன்று நாட்களுக்குள் சின்னா-பின்னமாக்கப் பட்டு பலரை சரணடையச் செய்து, கைது செய்து சிறையிலும் அடைத்து விட்டார்கள் கியுபா துருப்பினர். இன்று வரை கூட குவாதமாலா நாட்டிற்கு அமெரிக்கா நன்றிக்கடனாக என்னவெல்லாமோ செய்து கொடுக்கிறது.

இந்த கியூபாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த சோவியத்துக்கு நன்றிக்கடனாக-த்தான் அவர்களது அணு ஏவுகணை ஒன்றை கியூபாவுக்குள் நிறுவிய சோவியத் ஒன்றியம், பின்னர் அமேரிக்கா எச்சரிக்கை செய்து, இந்தா!!! போர் மீண்டும் மூளப்போகிறது என்று நினைத்த தருணத்தில், சோவியத் ஒன்றியம் என்ன நினைத்ததோ தெரியவில்லை, ஏவுகணையையும் எடுத்துக் கொண்டு பின்வாங்கிய சம்பவம் ஏற்கனவே நாம் பார்த்து இருக்கிறோம் அல்லவே?

## நிகழ்வுகள்

### கிரேஸ் ஆலய மத்திய நிலையத்தில்
## இலவச வைத்திய முகாம்

- ரூபதீன் -

அமெரிக்கன் இலங்கை திருச்சபை கிரேஸ் ஆலயதின் இல்லம் அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ளது. அங்கு கடந்த வியாழக்கிழமை இலவச வைத்திய முகாம் ஒன்று நடை பெற்றது. விசேட வைத்திய நிபுணர் டாக்டர் கனெகபாகுவின் ஒத்துழைப்புடன் திருகோணமலை பொது வைத்தியசாலை டாக்டர்களான வடிவுக்கரசி , சதீஷ் .ஜெயகுமார் ஆகியோர் இணைந்து நோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்கினர். இரத்த பரிசோதனையின் மூலம் இரத்த உயரழுத்தம் இரத்தத்தில் சர்க்கரை, இரத்தத்தில் கொழுப்பு, போன்ற பரிசோதனைகள் செய்து நோய் அறிகுறிகளை இனங்கண்டு உடனுக்குடன் இலவச மாத்திரைகளும் வழங்கப்பட்டன. கிரேஸ் முகாமயாளர் அஞ்சலா விக்னேஸ்வரன். தலைமை முகாமையாளர் டாக்டர் குணரத்தினம். வர்த்தகர் ராஜாராம்மோகன் அமெரிக்க மிஜுஅன் பல்கலைகழகத்தின் மருத்துவபீட இறுதியாண்டு மாணவன் அஞ்சன் குமர்சகா ஆகியோரின் ஏற்பாட்டில் இவ்வைத்திய முகாம் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 200 நோயாளிகள் இதன் மூலம் பயனடைந்தனர்..

அமெரிக்க கிரேஸ் ஆலயமானது வயது முதிந்த மாற்றுத்திரனாளிகள், இடம்பெயர்ந்த சிறுவர்கள் மற்றும் நோயாளர்களுக்கு நடமாடும் மருத்துவ முகாம்களை இனமத பேதமின்றி நடத்தி வருகிறது. நீண்டகால யுத்தம், சுனாமியின்போது உதவியதுடன், வதிவிட நலன்புரி நிலையங்கள் மூலம் 35 பெண் சிறுமிகள் 26 வயோதிபர்களை இலவசமாக பராமரிக்கப்பட்டு வருகின்ற ஒரு நலன்புரிநிலயமாகும்





## ஆரம்ப பாடசாலையின் கலைவிழா

மூர்ஜிப்பொத்தானை நிருபர்

மூதூர் அகதியா ஆரம்ப பாடசாலையின் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 29.12.2015 அன்று பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியரும் பணிப்பாளருமான எம் ஏ முஹ்சின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ருப் கலந்து சிறப்பித்திருந்தார். மாணவர்களுக்கு சான்றிதல்களும் பரிசில்களும் பாரளுமன்ற உறுப்பினரினால் வழங்கி வைக்கப்பட்டது.





## நூல் வெளியீடு


தம்பலகாம நிருபர்

கிண்ணியா ஏ.ஸீ.எம் முஸ்இல்இன் தேடலில் கிண்ணியாவின் முதல்வர்கள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் தி/கிண்ணியா அல்-அக்ஸா கல்லூரியில் மஹரூப் கலையரங்கில் நடைபெற்றது.

கிண்ணியா குரல் பதிப்பகம் ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்விற்கு கிண்ணியா மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.எம்.சரிப் தலைமை வகித்தார். இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிண்ணியா தள வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச்.சமீம் கலந்து கொண்டார்.

இதில் நூல் நயவுரையை கலாநிதி,கலாபூசனம் கே.எம்.இக்பால், வாழ்த்துபாவை கலாபூசனம் அலியும் நிகழ்த்தினார்கள். அத்துடன் சிறப்புப் பிரதிகளும் அதீதிகளுக்கு வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி

அகில இலங்கை ஆசிரியர்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் திருகோணமலை வலய ஆசிரியர்கள், பதக்கங்களை தமதாக்கி கொண்டுள்ளனர். இம்மாதம் 18ம் 19ம் திகதிகளில் நுவரெலிய நகர சபை மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றது. 25 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் ந.சிநேசன் 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர் தனி நிகழ்வுகளிலும், 4X100, 4X400 அஞ்சல் போட்டியிலும் முதலாம் இடத்தை பெற்று 5 தங்க பதக்கங்களை தனதாக்கி உள்ளார்.

30 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் புனித சூசையப்பர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் எஸ்.சிவதீபன் 400 மீற்றர் போட்டியில் முதல் இடத்தையும், 200 மீற்றர் போட்டியில் இரண்டாம் இடத்தையும், 800 மீற்றர் போட்டியில் மூன்றாம் இடத்தையும், 4X100, அஞ்சல் ஓட்டத்தில் முதலாம் இடத்தினையும், 4X400 அஞ்சல் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார். இதே வயது பிரிவில் புனித மரியாள் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் என.ஜெயதீபன் 200 மீற்றர் போட்டியில் இரண்டாம் இடத்தினையும், 100 மீற்றர் போட்டியில் மூன்றாம் இடத்தினையும், 4X100, அஞ்சல் ஓட்டத்தில் முதலாம் இடத்தினையும், 4X400 அஞ்சல் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.



## ஊரெழு றோயல் அபார வெற்றி

வடமாகாண ரீதியாக, யாழ்பாணம், வலிகாமம், தீவகம், வடமராட்சி, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் கால்பந்தாட்ட லீக்குகளின் அனுசரணையோடு வடக்கின் சமர் கால்பந்தாட்டத் தொடரை ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தி வருகிறது. இதில், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துக்கும் மயிலங்காடு பைவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்குமிடையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில், றோயல் விளையாட்டுக் கழகம், 6-1 என்ற கோல் கணக்கில் கோல் மழை புரிந்து வெற்றி பெற்றது. இதில், றோயலின் நட்சத்திர வீரர் கஜகோபன், ஹட்ரிக் கோல் உள்ளடங்கலாக நான்கு கோல்களைப் பெற்றார்.



கிரிக்கட்

## சங்ககாரவிற்கு விசேட வாழ்த்து நிகழ்வு

கடந்த செப்டம்பர் மாதம் ஷகாதத் ஹொசைன் வீட்டில் வேலை செய்த 11 வயது சிறுமி, தன்னை ஷகாதத் ஹொசைன் மற்றும் அவரது மனைவி இருவரும் கொடுமைப்படுத்தியதாக காவல்துறையில் புகார் அளித்ததை அடுத்து ஷகாதத் ஹொசைனை கைது செய்து பின்னர் அவருக்கு மார்ச் 31ம் திகதி வரை ஜாமின் வழங்கப்பட்டது.

இதற்கிடையில் ஷகாதத் ஹொசைன் மற்றும் அவரது மனைவி மீது தற்போது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருப்பதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு அதிகபட்சம் 14 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கலாம் என முன்னணி பத்திரிக்கை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



Cricket

## தலைக்கவசம் அணிந்த நடுவர்

அவுஸ்திரேலிய நடுவரான ஜெராட் அபூட், அவுஸ்திரேலிய உள்ளூர்ப் போட்டிகளில் தலைக்கவசமணந்து நடுவர் பணியில் ஈடுபட்ட முதலாவது நடுவராக மாறியுள்ளார். இடம்பெற்றுவரும் பிக் பா' லீக் போட்டிகளில், மெல்பேர்ண் றெனிகேட்ஸ் அணிக்கும் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்குமிடையிலான போட்டியிலேயே, அவர் இவ்வாறு தலைக்கவசத்துடன் பணிபுரிந்தார். அவுஸ்திரேலிய நடுவரான ஜோன் வார்ட், இந்தியாவின் ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளில் தலையில் தாக்கப்பட்டு, இன்னமும் சிகிச்சை பெற்றுவருகின்ற நிலையிலேயே, அச்சம்பவமே, தலைக்கவசம் அணியும் அவசியத்தை உணர்த்தியதாக, அவர் குறிப்பிட்டார். இருபதுக்கு-20 போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி வருகின்ற நிலையில், அதிக பலத்துடனும் பந்தை அடிக்கின்றனரெனத் தெரிவித்த அவர், பாதுகாப்பென்பது அவசியம் என்ற நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவித்தார்.



## லிவர்பூல் கழகம் கால்பந்தாட்டத்தில் வெற்றி

இடம்பெற்றுவரும் இங்கிலாந்து கால்பந்தாட்டப் போட்டிகளில் லிவர்பூல் கால்பந்தாட்டக் கழகம் வெற்றி பெற்றுள்ளது. சந்தர்லேண்ட் அணிக்கெதிரான போட்டியிலேயே இவ்வணி வெற்றி பெற்றுள்ளது. சந்தர்லேண்ட் அணிக்கெதிரான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் கால்பந்தாட்டக் கழகம் வெற்றி பெற்றிருந்தது. கடந்த ஐந்து நாட்களில் இரண்டாவது தடவையாக லிவர்பூல் அணிக்கான வெற்றிக் கோலை கிறிஸ்டியன் பென்டிகியே இப்போட்டியிலும் பெற்றிருந்தார். இப்போட்டியில் பெற்ற தோல்வியின் மூலம் பிறீமியர் லீக் போட்டிகளிருந்து வெளியேற்றப்படும் வலயத்துக்கு சந்தர்லேண்ட் சென்றுள்ளது.

இதேவேளை மன்செஸ்டர் யுனைட்டெட் கால்பந்தாட்டக் கழகத்துடன் ஆறாவது இடத்தை, லிவர்பூல் கால்பந்தாட்டக் கழகம், பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் பகிர்ந்துள்ளது.

கிரிக்கட்

## தென்னாபிரிக்கா சாதனை

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்டுகள் வீழ்த்தியதன் மூலம் தென் ஆப்பிரிக்க சுழற்பந்துவீச்சாளர் டேனி பியட் புதிய சாதனை படைத்துள்ளார்.



இந்தப் போட்டியில் 2வது இன்னிங்சில் இங்கிலாந்து 326 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது.


கடந்த 50 ஆண்டுகளில் தென் ஆப்பிரிக்காவின் ஆஃப் ஸ்பின்னர் யாரும் ஒரு இன்னிங்சில் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியது கிடையாது. இதன் மூலம் அவர் புதிய சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன் ஆஃப் ஸ்பின்னர் ப்ரோம்பீல்டு 1965ம் ஆண்டு ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருந்தார். இங்கிலாந்து அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்டுகள் வீழ்த்தியதன் மூலம் தென் ஆப்பிரிக்க சுழற்பந்துவீச்சாளர் டேனி பியட் புதிய சாதனை படைத்துள்ளார்.

## ரெஸ்லிங்கினுள் இந்திய வீரர்

உலக மேடையான ரெஸ்ட்லிங் விளையாட்டில் இந்தியர் கிரேட் காலி மட்டுமே இடம்பெற்றிருந்தார். இந்த நிலையில் ஹரியானாவை சேர்ந்த சாட்டெண்டர் டாகார் என்பவர் 2வது இந்திய நபராக ரெஸ்ட்லிங் விளையாட்டில் நுழைந்துள்ளார்.

கடந்த ஆண்டு ரெஸ்ட்லிங் நிர்வாகம் இவரை 3 வருடத்திற்கு ஒப்பந்தம் செய்தது. இந்த நிலையில் இந்திய தலைநகர் டெல்லியில் ஜனவரி 15, 16ல் நடைபெறும் ரெஸ்ட்லிங் போட்டியில் டாகார், சீனியர் வீரர்களான ஜான் சீனா, பிக் ஷோவுடன் மோதவிருக்கிறார். 6 அடி, 4 அங்குல உயரம் கொண்ட டாகார், 2 முறை தேசிய குர்'டி போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## 2015 இல் இந்திய வீரர்களின் சாதனையாளர்கள்

இந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகள் ரசிகர்களின் மிகுந்த வரவேற்ப்பை பெற்றது. இதில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வரும் அவுஸ்திரேலியா இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்தி உலகக்கிண்ணத்தை வென்றது.

அதே போல் ஷேவாக், சங்கக்காரா, கிளார்க். ஜாகீர்கான் என பல முன்னணி கிரிக்கெட் வீரர்கள் சர்வதேச போட்டிகளில் இருந்து விடைபெற்றனர்.

மேலும், இந்தியாவின் சானியா மிர்சாவுக்கு இந்த ஆண்டு சிறப்பான ஆண்டாக அமைந்தது. அவர் மார்ட்டினா ஹிங்கிஸ் உடன் ஜோடி சேர்ந்து இந்த ஆண்டை கலக்கி எடுத்தார்.

ஐபிஎல், ஆஷஸ் தொடர், ரக்பி உலகக்கிண்ணம் என இந்த ஆண்டில் மேலும் பல சுவாரஸ்யமான நிகழ்வுகள் அரங்கேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியிலும் குடும்ப ஆட்சி ?

## சனாதிபதியின் உறவுகளுக்கு முக்கியத்துவம்

நல்லாட்சி என்ற பெருடன் ஆட்சிக்கட்டேறிய தற்போதைய அரசாங்கத்திலும் குடும்ப ஆட்சிக்கான முயற்சிகள் சில முன் -னெடுக்கப்படுவதாக கொழும்பு டெலிகிராப் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 28ம் திகதி சனாதிபதியின் மகள் சத்துரிக்கா சிரிசேன, பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் விழாவொன்றில் பிரதம அதிதி-யாகக் கலந்துகொண்டதை அடுத்து இக்குற்றச்சாட்டுக்களை சமூகவலைத்தளங்களில் பலர் விடுத்துள்ளதாக டெலிகிராப் செய்தி தெரிவிக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சின் அமைச்சராக சனாதிபதி உள்ளார். அவர் தனது மருமகனைப் பாதுகாப்பு அமைச்சின் மக்கள் தொடர்பாடல்

17



சனாதிபதியின் மகள்

## 2016 எமது நாட்டுடைய வரலாற்றில் முக்கியமான ஆண்டாக்குவோம்



எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சம்பந்தரின் வாழ்த்து

தேசிய இனப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள ஒரு தீர்வை அடைய இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி 2016ஆம் ஆண்டை எமது நாட்டின் வரலாற்றில் ஒரு மாற்றமுடியாத சிறப்பான ஆண்டாக மாற்ற வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அர்த்தமுள்ள ஒரு தீர்வை அடைதல், மக்களுக்குப் பயன்தரக்கூடிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தல், நிலையான சமாதானத்தையும், புரிந்துணர்வையும் நிலைநாட்டல் போன்ற இமாலய பணிகளை எதிர்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில்,

17

## தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராகக் கி.மா.ச உறுப்பினர் ஜெனார்த்தனன் போர்க்கொடி

(அச்சுதன்)

ஐந்தாமாண்டுப் புலமைப் பரிசில், சாதாரணதர பரீட்சை உயர்தரம் ஆகிய பரீட்சை பெறுபேறுகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களும் உரிமை கோருகின்றன.

இலவச கல்வி வழங்கும் அரசாங்கமும், ஆளுக்கொரு கட்டணத்தில் கற்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களும் ஒன்றா? என கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர் ஜெனார்த்தனன் மாகாண சபையில் தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்களை நெறிப்படுத்த கிழக்கு மாகாண சபையின் கல்வி நிர்வாகத்தின் கீழ்........

கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிக்கவும் நெறிப்படுத்தவும் முடியும். கிழக்கு மாகாணத்தில் ஒவ்வாறு நகரங்களையும் மையமாக வைத்து இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் 90 வீதமான ஆசிரியர்கள்

17

## தென்னவன்மரபடி மக்களை அச்சுறுத்திய ஆயுததாரிகள்

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான தென்னவன்மரபடி (தென்னை மரவாடி) கிராமத்தில் கடந்த 31ம் திகதி இரவு ஆயுததாரிகள் சிலர் களவு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததுடன் மக்களை அச்சப்படுத்திய நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

கடந்த 31ம் திகதி இரவு சிலர் ஆயுதங்கள், அலவாங்ககள் சகிதம் தென்னவன்மரபடிக் கிராமத்திற்குள் நுழைந்துள்ளனர்.

அதனைக் கண்ணுற்ற யானை வேலிக்கான காவல் கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளி அவர்களை யாரென விசாரிக்க முற்பட்டபோது சரியான பதிலெதனையும் சொல்லாமல் கிராமத்தில் மக்கள் வசிக்காத வீடுகளில் உள்ள

17

## இந்திய மீனவருக்கு 11 வரை மறியல்

திருகோணமலை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருபத்தொன்பது இந்திய மீனவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலை நீதவான் சரவணராஜா முன்னிலையில் கொணர்ந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் -பட்டுள்ளது.

திருகோணமலை நாயாறு கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள், கடந்த 31ம் திகதி (வியாழக்கிழமை) அதிகாலை கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தாரிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த மீனவர்கள், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(நிக்கி தொம்சன்)






முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738





நன்றி - சமகளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 02.01.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.